பக்கங்கள்: 18 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 06 ஞாயிற்றுக்கிழமை 20.06.2021 கதிர் 227

**இது ரகசியம் அல்ல!**

பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியதும் நாடாளுமன்றுக்குள் நுழைவார், அமைச்சராவார் என்றெல்லாம் செய்திகள் பரவுகின்றன.

என்னிடம் ஒரு கேள்விதான் இருக்கின்றது.

அது – அவர் எப்படி பக்கம்02

## கொழும்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள

# கொடிய 'டெல்டா' வைரஸ் ஏனைய பகுதிகளுக்கும் பரவும் பேராபத்து!

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை



கொழும்பு, தெமட்டகொடைப் பகுதியில் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட– இந்தியாவில் பரவி வரும் – கொடிய 'டெல்டா' கொரோனா வைரஸ் வகை நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பரவும் அபாயம் உள்ளது எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரித்துள்ளது.

நாட்டில் மூன்று நாள்களுக்கு முன்பு அதிக வீரியம் கொண்ட டெல்டா (பி.1.617.2) கொரோனா வைரஸ் தொற்றுடன் கொழும்பு, தெமட்டகொடைப் பிரதேசத்தில் ஐவர் அடையாளம் காணப்பட்டனர்.

இவ்வாறு 'டெல்டா' வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ள தெமட்டகொடை – 66 வத்தைப் பகுதியில் குறைந்த வசதிகளுடன் 149 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 900 பேர் வசித்து வருகின்றனர் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்தார். 2

## மேலும் 54 பேர் மரணம்; கொரோனா காவு 2,534

கொழும்பு, ஜூன் 20

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி நேற்று முன்தினம் மட்டும் 54 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 23 பெண்களும், 31 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 534 ஆக அதிகரித்துள்ளது.

## வடக்கில் 7 கல்வி வலயங்களுக்கு புதிய பணிப்பாளர்கள் நியமனம்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தின் 7 கல்வி வலயங்களுக்கு புதிய கல்விப் பணிப்பாளர்கள் நியமனம் வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதனால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட சில வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஓய்வுபெற்றுச் சென்றதனாலும் மேலும் சிலர் இடமாற்றம் பெற்றுச் சென்றதனாலும் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்பும் வகையில் கோரப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கமைய வலிகாமம் கல்வி வலயத்துக்கு பொ.இரவிச்சந்திரனும், தீவகம் கல்வி வலயத்துக்கு தி.ஞானசுந்தரமும், வடமராட்சி கல்வி வலயத்துக்கு எஸ்.சத்தியபாலனும், மடு கல்வி வலயத்துக்கு எம்.முகுந்தனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு 2

## பேக்கரி விற்பனையாளர்களுக்கு கொரோனா பாதுகாப்பு அங்கிகள்



(இ.கலையமுதன்)

யாழ். பொலிஸாரினால் நடமாடும் பேக்கரி விற்பனையாளர்களுக்குக் கொரோனா பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.நகரில் இயங்கும் பேக்கரிகளில் நடமாடும் பேக்கரி உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் பிரதிநிதிகளுக்குக் கொரோனாப் பாதுகாப்பு 2

## 2,169 பேருக்கு நேற்று தொற்று

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 169 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 37 ஆயிரத்து 582 ஆக எகிறியுள்ளது.

கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த 2

## எம்.பி. ஆசனம் ஒன்றை இழந்தது யாழ்.மாவட்டம்

2020ஆம் ஆண்டு வாக்காளர் பதிவுப் பட்டியலின் பிரகாரம் யாழ்ப்பாணம் மாவட்டம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஆசனத்தை இழந்துள்ளது எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்படும் நாடாளுமன்ற ஆசனங்கள் ஆறாகக் குறைவடைந்துள்ளது.

இதனிடையே கம்பஹா மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நாடாளுமன்ற 2

## பருத்தித்துறை பொலிஸார் ஐவர் கொரோனாத் தொற்றால் பாதிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

பருத்தித்துறை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் ஐவர் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர் ஒருவர் என 6 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் பருத்தித்துறை நீதிமன்ற உத்தியோகத்தர்கள் இடையே கொரோனா நோய்த் தொற்றுள்ளமை கடந்த சில நாள்களாக கண்டறியப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் பெறப்பட்ட மாதிரிகளில் 2

## நங்கூரத்துடன் பிணைத்துக் கடலுக்கடியில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த கஞ்சா சிக்கியது

(இ.கலையமுதன்)

யாழ். மாதகல் கடலில் நங்கூரத்துடன் பிணைக்கப்பட்டு கடலுக்கடியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 93 கிலோ கேரள கஞ்சாவைக் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

கடல் வழியாக கஞ்சா கடத்திவரப்பட்டு நங்கூரம் ஒன்றில் பிணைத்து அதனைக் கடலுக்கடியில் பதுக்கி வைத்திருப்பதாகக் கடற்படையினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படாத நிலையில், சம்பவம் தொடர்பில் கடற்படையினரால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



## மன்னாரில் எரிகாயத்துடன் உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கிய திமிங்கலம்

(ந.லோகதயாளன்)

மன்னார் – முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கரடிக்குளி கடற்கரைப் பகுதியில் எரிகாயங்களுடன் இறந்த நிலையில் திமிங்கலம் ஒன்று நேற்றுக் காலை கரை 2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றுக்குள் நுழைவார்? அவர் எம்.பியாக சட்ட ரீதியான வாய்ப்புண்டா? – என்பதுதான்.

பொதுஜன பெரமுன (மொட்டு) கட்சிக் கூட்டணியில் தேசியப் பட்டியல் எம்.பி. பதவிகள் டசினுக்கு மேல் உண்டு. அதில் ஒருவரை ராஜினாமாச் செய்ய வைத்து விட்டு அந்த இடத்துக்கு பஸிலை நியமித்தால் போயிற்று என்று யாரும் கூறக் கூடும்.

ஆனால், அது இலகுவில் சட்ட ரீதியாக சாத்தியப்படக் கூடிய விடயமல்ல.

பொதுத் தேர்தல் நடந்த சமயம் நாட்டின் அரசமைப்பில் 19ஆவது திருத்தம் நடைமுறையில் இருந்தது. அதன்படி இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டோர் பொதுத் தேர்தலில் போட்டியிட முடியாது.

அமெரிக்கப் பிரஜாவுரிமையையும் தக்க வைத்துக் கொண்டிருக்கும் பஸில் ராஜபக்ஷ அதன் காரணமாகத் தேர்தலில் போட்டியிடவில்லை. எந்தக் கட்சியினதும், மாவட்ட ரீதியான வேட்பாளர் பட்டியலிலோ அல்லது தேசிய ரீதியான நியமனங்களுக்கான வேட்பாளர் பட்டியலிலோ அவர் பெயர் இடம்பெற்றிருக்கவில்லை.

இப்போது 19ஆவது திருத்தம் மாற்றப்பட்டு விட்டது. இருபதாவது திருத்தம் நடைமுறைக்கு வந்து விட்டது. அதன்படி, இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டோர் தேர்தலில் போட்டியிடலாம்.

இந்த இருபதாவது திருத்தத்தின்படி இனி பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடலாம், எம்.பியாகலாம், அதற்கு எந்த சட்டத் தடையும் கிடையாது.

ஆனாலும், இப்போது நடைமுறையில் இருக்கும் நாடாளுமன்றுக்கான தேர்தலின் போது பஸிலின் பெயர் எந்த வேட்பாளர் பட்டியலிலும் இல்லை.

அப்படி இருக்கையில் இப்போது மொட்டுக் கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பி. ஒருவர் ராஜினாமாச் செய்தால் அந்த இடத்துக்கு அந்த கூட்டணியின் தேசியப் பட்டியல் வேட்பாளர்களில் பெயர் குறிப்பிட்ட ஒருவரையோ அல்லது அக்கட்சியில் மாவட்ட ரீதியிலான தேர்தலில் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்படாத ஓர் உறுப்பினரையோதான் நியமிக்க முடியும்.

மொட்டுக் கட்சியின் தேசியப் பட்டியலில் உள்ள வேட்பாளர்கள் அனைவரும் எம்.பிக்களாக நியமிக்கப்பட்டு, அந்தப் பட்டியல் பூர்த்தியடைந்து விட்டால் –

அல்லது அந்தத் தேசியப் பட்டியலில் நியமனம் பெறாமல் இதுவரை அப்பட்டியிலில் எஞ்சியிருப்போர் அனைவரும் தாங்கள் தங்கள் பெயர்களை அந்தத் தேசியப் பட்டியலில் இருந்து விலக்கிக் கொள்கின்றோம் என்று தனித்தனி கடிதங்களை எழுதி தேர்தல் ஆணையகத்துக்கு அனுப்பி, தேர்தல் ஆணையம் அக் கடிதங்களைச் செயற்படுத்த ஏற்றுக் கொண்டால் –

அதன் பின்னர் மொட்டுக் கட்சிக் கூட்டணி தேசியப் பட்டியல் நியமனங்களுக்காக புதிய வேட்பாளர் பட்டியல் ஒன்றை சமர்ப்பிக்க வாய்ப்பு ஏற்படும்.

அச்சமயத்தில், அந்தப் பட்டியில் பஸில் ராஜபக்ஷவின் பெயரையும் சேர்த்துக் கொள்ளச் சந்தர்ப்பம் கிட்டும்.

அப்படி புதிய பட்டியல் பஸிலின் பெயரோடு சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அக்கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பி. பதவிக்கு ஒரு வெற்றிடம் ஏற்பட்டால் அதற்கு பஸிலை நியமிக்க முடியும்.

சுருக்கமாகச் சொல்வதானால், இன்றைய நிலையில் பஸில் ராஜபக்ஷ மொட்டுக் கட்சியின் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக வேண்டுமானால் –

அந்தக் கட்சியின் தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் அணியில் எஞ்சியிருப்போர் அனைவரும் அந்த முறையில் எம்.பி. பதவி ஏற்கத் தாங்கள் விரும்பவில்லை என்று தேர்தல் ஆணையத்துக்குத் தனித் தனியாக ஒப்பமிட்டுக் கடிதம் வழங்க வேண்டும்.

அப்படித் தேசியப் பட்டியல் வேட்பாளர் அணியில் பெயர் குறிப்பிடப்பட்டு இன்னும் எம்.பி. பதவி கிட்டாமல் டசினுக்கும் குறையாதோர் காத்திருக்கின்றனர். அவர்கள் அனைவரிடமும் விலகல் கடிதம் பெறுவது சாத்தியமானதா என்பது கேள்விக் குறியே. அவர்கள் ஒவ்வொருவரும் மொட்டுக் கூட்டணியின் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள். அக்கட்சிகள் பலவும் – குறிப்பாக விமல் வீரவன்ஸ, வாசுதேவ, உதய கம்மன்பில, ரிரான் அலஸ் போன்றோரின் கட்சிகள் ஏற்கனவே பஸிலுக்கு எதிராகக் கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றன. எனவே அக்கட்சிகள் மொட்டுக் கட்சியின் தேசியப் பட்டியலில் பெயருள்ள தமது கட்சிக்காரர்களை பஸிலுக்காக விலகிக் கொடுக்க இடமளிக்க மாட்டா.

எனவே, மொட்டுக் கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பி. ஒருவர் பதவி விலகி பஸிலுக்கு இடம் கொடுக்க முன்வந்தாலும், இப்போதைய நிலையில் மொட்டுக் கூட்டணிக்குள் பஸிலுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்திருக்கும் கட்சிகளின் தேசியப் பட்டியல் வேட்பாளர்களைத் தாண்டி, அந்த நியமனம் பஸிலுக்குக் கிடைப்பது துர்லபமே.

ஆனால், தேர்தல் சட்டங்களில், தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் நியமனங்கள் தொடர்பில் இதற்கென விசேட சட்டங்களைப் புதிதாகக் கொண்டு வந்து – புதிய திருத்தங்கள் செய்து – புதிதாக வேட்பாளர்களைச் சேர்த்துக் கொள்ளும் ஏற்பாடு ஒன்றை சட்ட ரீதியாகக் கொண்டு வந்தால், அது பஸிலுக்கு சாத்தியமாகலாம்.

ஆனால், பஸில் ராஜபக்ஷவை நாடாளுமன்றுக்குக் கொண்டு வருவதற்காக அப்படி ஒரு விசேட சட்ட ஏற்பாடு கொண்டு வருவதை, மொட்டுக் கூட்டணிக்குள் இருக்கும் பஸில் ராஜபக்ஷ எதிர்ப்புக் கட்சிகள் அனுமதிக்குமா என்பதும் கேள்வியே.

இந்த சர்ச்சைக்கு மத்தியில் ஒரு கட்சியின் வேட்பாளராகப் பெயர் குறிப்பிடப்படாத ஒருவர் அக்கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்டு, பதவி ஏற்ற ஒரு சம்பவம் முன்னர் நடந்திருக்கின்றது என்பதும் அறிவதற்கு சுவையான தகவல்தான்.

அவர் வேறு யாருமல்லர், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாதான். 2015 தேர்தலில் தமது ஜனநாயகக் கட்சியில் கொழும்பு மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்ட சரத் பொன்சேகா அத்தேர்தலில் தெரிவு செய்யப்படவில்லை. தோல்வியுற்றார். ஆனால் அவரது கட்சியை, தேர்தலின் பின்னர் தனது ஐக்கிய தேசியக் கட்சியையும் உள்ளடக்கிய ஐக்கிய தேசிய முன்னணியின் கூட்டணியில் இணைத்துக் கொண்டுள்ளதாக அறிவித்து, அந்த அடிப்படையில் தமது முன்னணியின் தேசியப் பட்டியல் எம்.பி. நியமனம் ஒன்றை அவருக்கு வழங்கினார் ஐ.தே.கட்சியின் தலைவரும் அப்போதைய பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க. சரத் பொன்சேகா அந்தத் தேர்தலில் ஒரு மாவட்டத்தின் வேட்பாளராக ஏதோ ஒரு கட்சியில் போட்டியிட்டவர் என்ற அடிப்படையில் அந்த நியமனத்தை அப்போதைய தேர்தல் ஆணையம் ஏற்றுக் கொண்டது. சரத் பொன்சேகா பின்னர் அமைச்சரும் ஆனார். தமது ஜனநாயகக் கட்சியைக் கலைத்து விட்டு பின் ஐ.தே. கட்சியில் ஐக்கியமானார். பிறகு அங்கிருந்து சஜித் அணியுடன் மூடையைக் கட்டிக் கொண்டு வெளியேறினார்.

இன்றைய சூழலில், பஸில் ராஜபக்ஷ தேசியப் பட்டியல் மூலம் எம்.பி. பதவியைப் பெற முயன்றால், அதை எட்டுவதற்கு என்ன வழி முறைகளை நாடப் போகின்றார், அப்படி அவர் ஏதேனும் குறுக்கு வழிகளை நாட முயன்றால், இவ்விவகாரம் நீதிமன்றுக்குப் போகும் போது, நீதிமன்றம் எப்படி நடந்து கொள்ளும் என்பவை எல்லாம் அறியச் சுவையான – பரபரப்பான – அரசியல் செய்திகளாக இருக்கும் என்பது நிச்சயம்.

– மின்னல் –

## எம்.பி. ஆசனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆசனங்களின் எண்ணிக்கை ஒன்றால் அதிகரித்துள்ளது.

இதற்கமைய கம்பஹா மாவட்டத்தின் புதிய நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை 18 இலிருந்து 19 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்துக்கு 9 நாடாளுமன்ற ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

எனினும், இந்த எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவுப் பட்டியலின்படி 7 ஆசனங்களாகக் குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கொடிய ‘டெல்டா’ ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்தோடு அங்கு வசிப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் தூய்மைப்படுத்தும் தொழிலில் ஈடுபடுபவர்கள் எனவும், பலர் ஓட்டோ சாரதிகள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், சிலர் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பின்னணியில், புதிய ‘டெல்டா’ வைரஸ் வகை நாட்டின் பிற பகுதிகளுக்கும் பரவக்கூடிய கடுமையான ஆபத்து உள்ளது என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

நாட்டில் பயணக் கட்டுப்பாடுகள் அமுலில் உள்ள போதிலும் அப்பகுதியில் வசிப்பவர்கள் சுகாதார வழிகாட்டுதல்களையும் நடைமுறைகளையும் புறக்கணித்து வருகின்றனர்.

இது குறித்து சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கையாக இருப்பதுடன், புதிய மாறுபாட்டின் பரவலைத் தடுக்க அனைத்து தடுப்பு நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்றும் உபுல் ரோஹண கேட்டுக்கொண்டார்.

## 2, 169 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எண்ணிக்கை ஒரு இலட்சத்து 99 ஆயிரத்து 393 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்து 655 ஆக அதிகரித்துள்ளது.

## பேக்கரி விற்பனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அங்கிகள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் பொருட்டு இனிவரும் காலங்களில் இந்தப் பாதுகாப்பு அங்கியை அணிந்தே விற்பனையில் ஈடுபட வேண்டும் என்று யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் 7 கல்வி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரி.தமிழ்மாறனும், மன்னார் கல்வி வலயத்துக்கு திருமதி தயாளினியும், வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு எல்.லெனினும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## மன்னாரில் எரிகாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒதுங்கியுள்ளது.

கொழும்பு கடற்பரப்பில் ‘எக்ஸ் – பிரஸ் பேர்ல்’ கப்பல் விபத்துக்குள்ளான பின் மன்னார் மாவட்ட கடற்கரையோரங்களில் தொடர்ச்சியாக கடலாமைகள் இறந்த நிலையில் கரை ஒதுங்கிக் கொண்டிருக்கும் நிலையில் மன்னார் – முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கரடிக்குளி கடற்கரைப் பகுதியில் எரிகாயங்களுடன் இறந்த நிலையில் திமிங்கலம் ஒன்று கரை ஒதுங்கியுளளது

ஏற்கனவே குறித்த கப்பலின் இரசாயனக் கழிவுகளால் வாழ்வாதாரத் தொழில் பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்ட மீனவர்கள் குறித்த திமிங்கலம் கரை ஒதுங்கியதால் மேலும் அச்சமடைந்துள்ளனர்.

அண்மைக் காலமாக மன்னார் மாவட்டத்தில் தாழ்வுபாடு, வங்காலை மற்றும் சிலாபத்துறை கடற்கரை பகுதிகளில் உயிரிழந்த நிலையிலும், கடுமையான சேதங்களுடனும் கடலாமைகள் கரை ஒதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பருத்தித்துறை பொலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

17 பேரின் மாதிரிகள் கடந்த வெள்ளிக்கிழமை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் மீளவும் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டது.

அதனடிப்படையில் நேற்று பெறப்பட்ட மாதிரிகளில் பருத்தித்துறை பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட ஐவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், பருத்தித்துறை நீதிமன்றில் பணியாற்றும் ஒருவருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, மேலும் ஐவரின் மாதிரிகளை மீளப்பெறுமாறு ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களால் அறிக்கையிடப்பட்டுள்ளது.



# அரசின் ஒரு லட்சம் வேலைவாய்ப்புகளில் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் நியமனம்

## வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம்

அரசாங்கத்தின் ஒரு லட்சம் வேலைவாய்ப்பு நியமனங்களில் ஒரு தொகுதி உள்ளூராட்சி மன்ற நியம விதிகளுக்கு முரணாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதை கண்டித்து வலிகாமம் வடக்கு பிரதேச சபை கண்டனத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை கொல்லங்கலட்டியில் அமைந்துள்ள பிரதேசசபையின் மாநாட்டு மண்டபத்தில் சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நடைபெற்றது. இந்த அமர்விலேயே மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பிரதேச சபைகளின் ஆளணி உருவாக்க நியம விதிகளின் படி, அட்டவணைப்படுத்தப்படாத ஆளணிகளுக்கு உள்வாங்கப்படும் போது அவர் அந்தப் பிரதேச சபை எல்லையில் நிரந்தர குடியிருப்பாளராகக் காணப்பட வேண்டும். அது அவரது வாக்காளர் பட்டியல் ஊடாக உறுதிப்படுத்தப்படும். பிரதேச சபைகளில் அட்டவணைப்படுத்தப்படாத ஆளணிகளை நியமிக்கின்றபோது நியமன அதிகாரி சபையின் செயலாளரே ஆவார்.

இது இவ்வாறிருக்க, பிரதேச சபைகளின் ஆளணி உருவாக்க முறைக்கு முரணாக – அந்தப் பிரதேசசபை எல்லைக்குள் வதியாத ஒருவரை – பிரதேசசபைகளுக்கு அட்டவணைப்படுத்தப்படாத ஆளணி பதவிகளுக்கு நியமிப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று



தெரிவித்து ஏகமனதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் பிரதிகளை இதனுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் அமைச்சுக்கள், திணைக்களங்களுக்





தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக நடைமுறையில் உள்ள பயணத் தடை உத்தரவின் பேரில் நாளாந்த வருமானம் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் தெய்வேந்திரம் கிரிதரன் தலைமையில், நல்லூர் பிரதேச மக்களுக்கு குறித்த உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

சுமார் 2 லட்சத்து 85 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 ஆயிரத்து 300 உலர் உணவுப் பொதிகள் 125 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

# வைரஸ் தொற்று உயிரிழப்பு எரியூட்ட கட்டணம் இல்லை

## வவுனியா நகர சபை பிதா அறிவிப்பு

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் வறுமைக்கோட்டை சேர்ந்தவர்களை எரியூட்டுவதற்கு கட்டணம் அறவிடப்படாது என வவுனியா நகரசபை தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்கள், வவுனியா நகர சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பூந்தோட்டம் மயானத்தில் எரியூட்டப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சடலங்களை எரியூட்டுவதற்கு இதுவரை காலமும் கட்டணம் அறவிடப்பட்டு வந்தது. ஆனாலும் குறித்த செயற்பாட்டால் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட குடும்பத்தினர், பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆகையினால்இன்றுமுதல்வைரஸ் தொற்றினால் உயிரிழக்கும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களின் சடலங்களை மாத்திரம் கட்டணம் அறவிடாமல் எரியூட்டுவதற்கு தீர்மானித்துள்ளோம். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.










விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நூற்றாண்டில் சீனக் கம்யூனிஸ்ட்

இன்றைய சீனாவில் – மக்கள் சீனக் குடியரசில் – ஆளும் கட்சி ஒன்றுதான். சீனப் பொதுவுடமைக் கட்சி அல்லது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயர் கொண்ட அந்த அமைப்புத்தான் உலகின் மிகப் பெரும் அரசியல் கட்சியாகும்.

அது தோற்றுவிக்கப்பட்டு நூறாவது ஆண்டு சீனாவில் கடந்த வாரத்தில் இருந்து கொண்டாடப்படுகின்றது.

சீன கம்யூனிஸ்ட் கட்சியைப் பின்பற்றும் உலக நாடுகளின் பிற கட்சிகள் தத்தம் நாடுகளிலும் அக்கொண்டாட்டங்களை நடத்துகின்றன.

இலங்கையிலும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் லங்கா சமசமாஜக் கட்சி ஆகியன இணைந்து – தற்போதைய கொரோனாக் கெடுபிடிக் கட்டுப்பாடுகளுக்கு அமைய – கடந்த செவ்வாயன்று இத்தகைய நிகழ்வு ஒன்றைக் கொழும்பில் நடத்தின. மேலும் பத்து இடதுசாரிப் போக்குக் கட்சிகள் மற்றும் அமைப்புகள் இந்த நிகழ்வில் பங்கு கொண்டன.

1921 இல் பன்னிரண்டு முக்கிய தலைவர்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய சீனப் பொதுவுடமைக் கட்சி 1949 இல் சீனப் புரட்சி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றியது.

அன்று முதல் இன்று வரை அந்த கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி எழுபத்தியிரண்டு ஆண்டுகளாக இடையூறின்றித் தொடர்ந்தாலும் பல அரசியல் சூறாவளிகளையும் அதிகாரப் போட்டிக்கான பூகம்பங்களையும் சீனா சந்திக்கத் தவறவில்லை.

நவசீனத்தின் பிதா மகர் என்று போற்றப்பட்ட மாவோ சேதுங்கே இந்த ஊழிக் கூத்தான பெரும் பிரளயத்தை நவசீனத்தில் நடத்திக் காட்டினார். அதனால் இன்று அவர் மோசமாக விமர்சிக்கப்படுகின்றார்.

பல நூற்றாண்டு கால அந்நிய ஆக்கிரமிப்புக்குப் பின்னர் சீனாவில் நிகழ்ந்த கம்யூனிஸப் புரட்சியைத் தொடர்ந்து அங்கு உள்நாட்டுப் போர் நீடித்தது. அதிகாரத்தில் இருந்த குவாமின்டாங் கட்சியை எதிர்த்து மாவோவின் சீனப் பொதுவுடமைக் கட்சி கிளர்ந்த போது உள்நாட்டுப் போர் வெடித்தது. குறைந்த ஆளணியோடு அதனை வெற்றித் திசையில் கொண்டு சென்று பொதுவுடமைக் கட்சியின் ஆட்சி அதிகாரத்தை நிறுவினார் மாவோ.

சீனாவில் பண்பாட்டு முக்கியத்துவம் மிக்க பெய்ஜிங்கின் தியனன்மென் சதுக்கத்தில் இருந்து சீன மக்கள் குடியரசு நிறுவப்படுவது குறித்து 1949 ஒக்டோபர் முதலாம் திகதி பிரகடனப்படுத்தினார் மாவோ.

அதற்குப் பின்னர் சீனா இயன்றளவில் உலகப் பெருவல்லசராக உயர்ந்து நிற்கின்றது என்றாலும் அது கடந்த வந்த பாதை – சீனக் கம்யூனிஸ் கட்சி தாண்டிய கடந்த காலம் – கொந்தளிப்புகளும், புதிய புரட்சிகளும் அடங்கியது.

நவசீனத்தில் முதலாவது புரட்சியை அறிவித்தவர் மாவோ சேதுங்தான்.

புரட்சிக்குப் பின் ஒரு புரட்சியாக, தொடர் புரட்சியாக, பழமையை மாற்றியமைக்கும் பண்பாட்டுப் புரட்சியாக அந்தப் பூகம்ப நிகழ்வு அரங்கேறியது.

அந்தப் புரட்சி விளைவித்த பேரனர்த்தம் பயங்கரமானது. நாடு முழுவதுமே ஒரு வன்முறைப் பிரளயத்தில் மூழ்கி எழுந்தது. அந்தப் புரட்சிப் பெருவெள்ளத்தில் அள்ளுப்பட்டுச் சென்றவர்களின் எண்ணிக்கையோ எண்ணிலடங்காதது. அது சீனக் கம்யூனிஸ் இயக்கத்தை ஓர் உலுப்பு உலுப்பியது. வேர் அறுத்து விழுந்த விருட்சங்கள் போல கட்சியின் பழம் பெரும் தலைவர்கள் தூக்கி எறியப்பட்டனர். சீன சோசலிஸ நிர்மாணம் ஓர் இருண்ட யுகத்தினுள் தள்ளப்பட்டது. முன்னோக்கி நகர்ந்து வந்த செஞ்சீனம் இந்தக் கால கட்டத்தில் ஒரு பின்னோக்கிய பாய்ச்சலை நிகழ்த்தியது என்கின்றார் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம்.

'முன்னோக்கிய பெரும் பாய்ச்சல்', 'பண்பாட்டுப் புரட்சி' என்ற பெயர்களில் 1966 முதல் ஒரு தசாப்த காலத்துக்கு மாவோ நிகழ்த்திய சமூகப் பரிசோதனைகளின்போது பெரும் தவறுகள் இழைக்கப்பட்டன. பின்னாளில் சீனத் தலைமைகள் மாவோவின் இந்தப் பரிசோதனைகளைக் கண்டித்தும் விமர்சித்தும் இருக்கின்றன.

சீனத் தேசிய விடுதலையிலும், சமூகப் புரட்சியிலும் அளப்பரும் பங்காற்றிய சீனாவின் – சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் – பிதாமகர் மாவோ. சீனாவின் சிற்பி எனப் போற்றப்படும் மாவோ அவரின் பிந்திய பண்பாட்டுப் புரட்சிக்காக இகழப்படவும் செய்கின்றார்.

1949 இல் உருவான நவசீனத்தில் 1989 இல் ஜனநாயக உரிமைகள் கோரி மாணவர்கள் – இளைஞர்கள் – ஆரம்பித்த ஜனநாயக ரீதியான போராட்டத்தின் மீது இராணுவச் சட்டத்தையும், அரச இராணுவத்தையும், கவச வாகனங்களையும் ஏவி விட்டு, துப்பாக்கிகள் மற்றும் பீரங்கிகளின் முனையில் அடக்கியது சீன கம்யூனிஸ் கட்சியின் ஆட்சி. பல்லாயிரம் இளம் உயிர்கள் துடிக்கத் துடிக்கச் கொன்றொழிக்கப்பட்டன.

மாவோ சேதுங், மக்கள் சீனக் குடியரசு அமைக்கப்படுவதாகப் பிரகடனப்படுத்திய அதே தியனமென் சதுக்கத்திலேயே இந்தப் படுகொலைகளும் அரங்கேறின.

மர்மங்கள், உள்குத்துகள், சூழ்ச்சிகள், வெளியே தெரியாத இரகசியங்கள் புதைந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அதன் ஆட்சி முறைக்குள் அவிழ வேண்டிய முடிச்சுகள் இன்னும் நிறையவே – தாராளமாகவே – உள்ளன.

# தமிழர்களுக்கு உரிய தீர்வை வழங்க இந்தியா, அமெரிக்கா முன்வரவேண்டும்

## சிவாஜிலிங்கம் கோரிக்கை



இந்தியா – அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இலங்கை விவகாரத்தில் இனியும் தலையிடவில்லை என்றால் 13 ஆவது திருத்தச்சட்டமும் இல்லாது போய்விடும் என முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழில் நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் எம்.கே.சிவாஜிலிங்கம் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

இந்தியாவிடம் ஒன்றையே கேட்க விரும்புகின்றோம்.

தற்போது இருக்கின்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்காவிடின் உங்களால் இனி எதனையும் செய்ய முடியாமல் போகும்.

மேலும் இலங்கைத் தீவுக்குள்ளே பூகோளம் நலன்சார்ந்த பிரச்சினையில் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் சேர்ந்த இணை அமைப்பாக இருக்கலாம் அல்லது ஐரோப்பியா உள்ளிட்ட ஏதாவது ஓர் அமைப்பு, வடக்கு கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும்.

குறித்த வாக்கெடுப்பை நடத்துவதன் ஊடாகவே எங்களுடைய மக்களின் தலைவிதியை அவர்களே தீர்மானிக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும். அதுதான் நிரந்தர அரசியல் தீர்வாக இருக்கும்.

ஆகவே இந்த விடயத்தில் இறுக்கமான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆடைத் தொழிற்சாலையை மூடாவிட்டால் பாரிய அபாயத்தை எதிர்நோக்க நேரிடும்!

## மன்னார் நகர முதல்வர் எச்சரிக்கை



கொரோனா அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள மன்னார் ஆடைத் தொழிற்சாலையை உடனடியாக மூடி, நடவடிக்கை மேற்கொள்ளாவிடின் பாரிய அபாயத்தை எதிர்நோக்க நேரிடும் என நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

அண்மைக் காலமாக மன்னாரிலுள்ள குறித்த ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு, தொடர்ந்து கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் ஆடைத் தொழிற்சாலையைத் தற்காலிகமாக மூடி, கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை சுகாதாரத் துறையினர் முன்னெடுக்காமல் இருப்பது ஏன் என்று தெரியவில்லை.

ஆகவே 'வரும் முன் காப்போம்' என்பதற்கு அமைய மன்னாரிலுள்ள ஆடைத் தொழிற்சாலையை தற்காலிகமாக மூடி, மாவட்டத்தில்ஏற்படவுள்ளபாரியஅபாயத்தை தடுப்பதற்கு அரச உயர் அதிகாரிகள், சுகாதாரத் துறையினர் ஆகியோர் துரித நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தொற்றுநோய்த் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் அவசர இடமாற்றம்



சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்

அந்தவகையில் அவர் டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் பதில் பணிப்பாளராக கடமையாற்றிய விசேட வைத்தியர் சமித கினிகே அப்பிரிவிற்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான கொரோனாத் தடுப்பு செயலணியின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

# அதிக விலைக்கு பழம், மரக்கறிகள் விற்பவர்களுக்கு எச்சரிக்கை விடுப்பு!

வீடுகளுக்கு சென்று அதிக விலையில் பழங்கள் மற்றும் மரக்கறி விற்பனை செய்பவர்களின் அனுமதி ரத்து செய்யப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார புத்தாக்கம் மற்றும் வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக பாதிக்கப்பட்டுள்ள நுகர்வோர் மற்றும் விற்பனையாளர்களைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த நடைமுறையை முன்னெடுக்கவுள்ளதாக செயலணியின் தலைவர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், வீடுகளுக்கு சென்று அதிக விலையில் பழங்கள் மற்றும் மரக்கறி விற்பனை செய்யப்படுகின்றன எனப் பல்வேறு தரப்பினரும் முறைப்பாடு செய்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


திருமண தேடலை இலகுவாக்கும் ஒரு முயற்சி
ஆயிரக்ககணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு அரச தனியார்
தொழில்புரியும் மணமக்களிலிருந்து உங்களுக்கு
பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்.
அருந்ததி
இணைய திருமண சேவை
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி, கொக்குவில்
www.arunthathee.com | +94 777 164 524

காலைக்கதிர் Kalaikkathir

# டொல்பின், மூன்று கடல் ஆமைகள் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கின

## மட்டக்களப்பு கடற்கரையில்

மட்டக்களப்பு - கிரான்குளம் கடற்கரையில் உயிரிழந்த நிலையில் 3 கடல் ஆமைகள் மற்றும் ஒரு டொல்பின் மீன் ஆகியன நேற்று (சனிக்கிழமை) கரையொதுங்கியுள்ளன.

குறித்த பகுதியில் மேலும் பல ஆமைகள் இறந்து வருகின்றன என கடல் தொழிலுக்கு சென்று திரும்பிய மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் சம்பவம் அறிந்து அந்த இடத்துக்கு வருகைதந்த கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகள், கடல் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் உட்பட்ட அதிகாரிகள் பார்வையிட்டனர்.

இந்நிலையில் கரையொதுங்கிய டொல்பின் மற்றும் கடலாமைகள் ஆகியவற்றை பகுப்பாய்விற்காக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கொண்டுசென்றுள்ளனர்.

அண்மைக்காலமாக இதுவரை 40 இற்கும் மேற்பட்ட கடலாமைகளின் உடல்களும் 5 டொல்பின்களின் உடல்களும் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் கரையொதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# தேங்காய் ஒன்றிற்கு விதிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலை இரத்து



தேங்காய் ஒன்றிற்கான அதியுச்ச நிர்ணய விலையை அறிவித்து நுகர்வோர் விவகார அதிகார சபையால் கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் ரத்து செய்யப்பட்டுள்ளது.

13 அங்குலத்திற்கு அதிகமான தேங்காயை 70 ரூபாவுக்கும் 12 முதல் 13 அங்குலம் வரையான தேங்காயை 65 ரூபாவுக்கும் 12 அங்குலத்துக்குக் குறைவான தேங்காயை 60 ரூபாவுக்கும் விற்பனை செய்ய கடந்த ஆண்டு தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் அளவு அடிப்படையில் தேங்காய்க்கான நிர்ணய விலை தொடர்பாக கடந்த ஆண்டு வெளியிட்ட குறித்த வர்த்தமானி அறிவிப்பை இரத்து செய்வதாக நுகர்வோர் விவகார அதிகார சபை நேற்று (சனிக்கிழமை) அறிவித்துள்ளது.

# பயணக்கட்டுப்பாட்டால் வாழ்வாதாரமிழந்த மலையக மக்கள் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு





நுவரெலியா, ஜூன் 20

நுவரெலியா - வட்டவளை, கரோலினா தோட்டத்திலுள்ள மக்கள் பல்வேறு கோரிக்கைகளுக்குத் தீர்வு கோரி, ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் கூறியவை வருமாறு -

பயணக்கட்டுப்பாடுகள் காரணமாக வெளியிடங்களுக்கு சென்று தொழில் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனால் நாம் வாழ்வாதாரத்தை இழந்து தற்போது நிர்க்கதியாகி உள்ளோம். மேலும் குறித்த காலகட்டத்தில் அரசாங்கத்தால் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா நிவாரணம் கூட இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை.

இதனால் எம்முடன் சேர்ந்து எங்களது பிள்ளைகளும் ஒருவேளை உணவுக்காகக்கஷ்டப்படும்நிலைமை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் தோட்ட தொழிற்சங்க பிரதிநிதிகள் கூட எங்களது பகுதிக்கு வருகைத்தந்து எமது நிலைமைகள் தொடர்பாக கவனம் செலுத்தவில்லை.

ஆகவே, எங்களது இத்தகைய பிரச்சினைக்கு உரிய தீர்வை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வழங்கும் வரை தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம்' என போராட்டத்தில் ஈடுபட்டோர் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அவரடியைத் தினம்பரவி ஆசிபெற்று வாழ்ந்திடுவோம்!

இன்று தந்தையர் தினம் அதனையொட்டி இக்கவிதை பிரசுரமாகின்றது.

பெற்றெடுப்பாள் அம்மா பேணிடுவார் அப்பா
உற்றதுணை அப்பா உழைப்புமே அப்பா
நற்றவற்றால் நமக்கு வாய்த்தவரே அப்பா
நானிலத்தில் என்றும் நமக்குத் தெய்வமவரே

பக்குவமாய் இருக்கப் பாடம் அவராவார்
தக்கவொரு குருவாய் தானவரும் இருப்பார்
எக்கணமும் எம்மை நினைப்பிலவர் வைப்பார்
இப்புவியில் எமக்குத் தக்கதுணை அவரே

தோளேற்றி எம்மைத் தூக்கிச் செல்வாரப்பா
சுமை தாங்கியாக வாழ்ந்திடுவார் அப்பா
ஆழமுடை அன்பை அகநிறைப்பார் அப்பா
அகிலமதில் வணங்கும் அன்புத் தெய்வமவரே

கற்றவர்கள் முன்னே நிற்கவைக்க நினைப்பார்
கற்பவற்றை முறையாய் கற்கவழி சமைப்பார்
மற்றவர்கள் மதிக்க வாழுவென உரைப்பார்
மாநிலத்தில் நாளும் வணங்குந் தெய்வமரே

நீதிநெறி வழுவா வாழ்கவென மொழிவார்
நேர்மையினை நெஞ்சில் நிறைக்கவென உரைப்பார்
பாதையிலே நிமிர்ந்து நடக்கவெனப் புகல்வார்
பகலவனாய் என்றும் ஒளிர்ந்திடுவார் அப்பா

வீண்வாதம் வில்லங்கம் வெங்கோபம் விரும்பார்
வெந்தணலாய் வார்த்தைகளை வீசுவதை வெறுப்பார்
மாண்பகலா வழியினையே வரமெனவே நினைப்பார்
மாநிலத்தில் விடிவிளக்காய் வாழ்பவரே அப்பா

பஞ்சமா பாதகங்கள் பக்கமவர் பார்க்கார்
பகுத்துண்டு ஓம்புவதை மனமிருத்த நினைப்பார்
கஞ்சநிலை நஞ்செனவே கனன்றெழுந்து உரைப்பார்
கண்காணும் தெய்வமாய் காணுகிறார் அப்பா

மருத்துவராய் வந்தாலும் வழக்குரைஞர் ஆனாலும்
கணக்காளார் ஆனாலும் கலைநிபுணர் ஆனாலும்
நினைத்தவுடன் செயலாற்றும் நீண்டசெல்வர் ஆனாலும்
தலைக்கனத்தை வாழ்வினிலே தகர்த்தெறிதல் பண்பென்பார்

ஆன்மீகம் அவருரைப்பார் அறிவியலும் அவருரைப்பார்
அருந்துணையாய் அவரிருப்பார் அவரணைப்பில் நாமிருப்போம்
ஆண்டவனின் உருவாக ஆனவரே அப்பாதான்
அவரடியைத் தினம்பரவி ஆசிபெற்று வாழ்ந்திடுவோம்

- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
மெல்பேண், ஆஸ்திரேலியா



# அதிக ஆபத்துள்ள பகுதிகள் அடையாளம் காணப்பட்டன

கடந்த 14 நாள்களுக்குள் அதிகளவிலான கொரோனாத் தொற்று நோயாளிகள் பதிவாகிய இடங்களை இலங்கையில் அதிக ஆபத்துள்ள பகுதிகளாக தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளில் அதிகளவில் பதிவாகிய நோயாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் குறித்த வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி முசலி, பலுகஸ்வேவ, சேருவில, செங்கலடி, காரைதீவு தெற்கு மற்றும் லொஹுகல போன்ற சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகள் அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேலும் மாந்தை கிழக்கு வெலிஓயா போன்ற பகுதிகளில் அதிகளவிலான கொரோனாத் தொற்று நோயாளிகள் பதிவாகியுள்ளனர் எனத் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## பச்சை சுவர்

பிரெஞ்சு தாவரவியலாளர் பேட்ரிக் பிளாங்க் பச்சை சுவர் இயக்கத்தின் தந்தை என்று புகழப்படுகிறார். 1988 ஆம் ஆண்டில் பாரிஸில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்துறை அருங்காட்சியகத்தின் வெளிப்புறத்தில் அவர் தனது முதல் திட்டத்தை தயாரித்தார். அவரது பிற படைப்புகள் டசின் கணக்கானவை. இப்போது உலகளவில், உட்புறங்களில் மற்றும் வெளியே நிறுவப்பட்டுள்ளன. பிளாங்க் தனது திட்டங்களை வாழ்க்கை ஓவியங்கள் அல்லது தாவர சுவர்கள் என்று குறிப்பிடுகிறார்.

பிளாங்கின் முறைகளைப் பயன்படுத்தி ஒரு செங்குத்து தாவர சுவர் அல்லது தோட்டத்தை உருவாக்குவதற்கு உலோக ஃப்ரேமிங், கடினமான பிளாஸ்டிக் தாள் மற்றும் உணரப்பட வேண்டும். செங்குத்து தாவர சுவரின் சட்டத்தை ஒரு சுவரில் தொங்கவிடலாம் அல்லது அது தனியாக நிற்க முடியும். கடினமான பிளாஸ்டிக், சட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. சுவரை நீர்ப்புகாக்கும். தாவரங்களின் வேர்கள் உணர்ந்தவையில் வளர்கின்றன. இது நீர் மற்றும் உரத்தை சமமாக விநியோகிக்கிறது.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி




இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.
தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

**தொகுப்பு:- எஸ். வனோஜா**

## 26ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**251.அண்மையில் ICCஇன் Wall of Fameஇல் இடம்பிடித்த இலங்கைத் துடுப்பாட்ட வீரர் யார்?**

**252.இலங்கையில் பொதுமக்களுக்கு வழங்க எதிர்பார்க்கப்பட்டுள்ள அமெரிக்க நிறுவனத்தின் தடுப்பூசியின் பெயர் என்ன?**

**253.இலங்கையின் மத்திய மலை நாட்டு பிரதேசத்தில் முதலில் யாரால் தேயிலை விளைவிக்கப்பட்டது?**

**254.உலக சுற்றுலா தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?**

**255.ஐக்கிநாடுகள் சபையில் இறுதியாக இணைந்த நாடு எது?**

**256.சுதந்திர இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சர் யார்?**

**257. கதிர்த்தொழிற்பாட்டை கண்டு பிடித்தவர் யார்?**

**258. Microsoft நிறுவனத்தினால் காணொலி மாநாட்டுக்காக (Video Conference) அறிமுகப்படுத்தப்பட்ட மென்பொருள் யாது?**

**259. பச்சைச் சுவர் இயக்கத்தின் தந்தை யார்?**

**260. மின்குமிழைக் கண்டுபிடித்தவர் யார்?**

பெயர் :- ................................................ அடையாள அட்டை:- ..............................
முகவரி :- ................................................ மின்னஞ்சல் முகவரி:- ..............................
தொலைபேசி இலக்கம்:- ..........................

## 24ஆவது போட்டிக்குரிய பதில்கள்

**231. யூன்- 08**
**232. குருகுலம் (குருகெதர)**
**233. ஜெப் பெரோஸ்**
**234. நப்தாலி பென்னட்**
**235. 2 ஆம் பராக்கிரமபாகு**
**236. மேரி கியூரி**
**237. 17, 14**
**238. $AB^+$**
**239. 1815 ஆம் ஆண்டு**

## 18ஆம் திகதி வெளியான 24ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

1. ஐ. கார்த்திகன்
2. ஏ. துஷான்
3. வை. அபிமாறன் - கரவெட்டி
4. ஆ.கா.ஶ்ரீதரன் - கொழும்பு (09 சரி)
5. எம். வர்ணபாலன் - யாழ்ப்பாணம் (09 சரி
6. கே. அனுஷன் - ஏழாலை (09 சரி)
7. எஸ். சதுர்ஜினி - அல்வாய் (09 சரி)
8. செ.ஶ்ரீஇராமச்சந்திரன் - வத்திராயன் (08 சரி)
9. ஜெ. வினோஜன் - குடத்தனை (08 சரி)

# மன்னாரில் புதிதாக 49 பேருக்கு தொற்று

மன்னாரில் புதிதாக 49 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தியர் த.விநோதன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

புதிதாக அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்கள் உள்ளடங்களாக இந்த மாதத்தில் இதுவரை 114 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் 456 பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் கிடைக்க உள்ளன. இதேவேளை மன்னாரில் இயங்குகின்ற ஆடைத் தொழிற்சாலையை, சுகாதாரப் பிரிவினர் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

அத்துடன் குறித்த ஆடைத்தொழிற்சாலையில் 23 பேர் வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு அவர்களில் முதல் தொடர்பாளர்கள், தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

ஆகவே வைரஸ் தொற்றில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொவிட் தொற்றாளர்களின் சிகிச்சைக்கான உபகரணங்கள் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டன

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்ட பிரஜைகள் குழுவால், திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு இந்த மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் குறித்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

திருகோணமலை பொது வைத்தியசாலை நிர்வாகத்தினரால் அண்மையில் கோரப்பட்டிருந்த 15 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களே இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி சேகரிப்பின் ஊடாக வைத்திய இயந்திரங்கள், முகக் கவசங்கள், தனிப்பட்ட பாதுகாப்பு அங்கிகள், தொலைக்காட்சி ஆகிய பொருள்கள் கொள்வனவுசெய்யப்பட்டு, திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்திலுள்ள யாசகர்களுக்கு மதிய உணவு வழங்கினர் பொலிஸார்



யாழ்ப்பாணம் நகரப்பகுதியிலுள்ள யாசகர்களுக்கு, மதிய உணவுகள் பொலிஸாரால் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) வழங்கி வைக்கப்பட்டன.

பயணத்தடை காரணமாக யாழ்.நகரை சூழவுள்ள பகுதிகளிலுள்ள யாசகர்கள், உணவுக்காக பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

இந்நிலையில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர்கள், உணவில்லாமல் பாதிக்கப்பட்ட யாசகர்களுக்கு சமைத்த உணவுகளை வழங்கியுள்ளனர்.

குறித்த நிகழ்வு இன்றும் மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# திருமணத்துக்கு பிறகு தம்பதியர் மகிழ்ச்சியான வாழ்க்கையை மேற்கொள்ள என்ன செய்ய வேண்டும்?



தொகுப்பு -
ப்ரியமதா பயஸ் -

திருமணம் என்பது இரண்டு நபர்களை ஆயுள் முழுக்க இணைக்கும் அன்பு பந்தம். இந்த பயணத்தில் நிறைவான அன்பு, மகிழ்ச்சி, இனிமையான தருணங்கள், அரவணைப்பு, ஊடல், கொஞ்சல், குமுறல், சின்ன சின்ன கோபங்கள் என எல்லாமே இருக்கக்கூடும். இருக்கவும் வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை எல்லாம் கலந்த கலவையாக கவலையில்லாமல் இருக்கும்.

திருமணத்துக்கு பிறகு வாழும் காலம் மகிழ்ச்சியாக இருக்க தம்பதியர் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வேண்டும். மேலும் உங்களுக்காக சில ரகசிய குறிப்புகள். எல்லா வயதினருக்கும் ஏற்ற குறிப்புகள் உங்கள் வாழ்க்கைக்கு நிச்சயம் உதவும்.

### பலம் மற்றும் பலவீனம் புரிதல் அவசியம்

இருவரும் முன்னரே அறிமுகமான காதலராக இருந்து கரம்பிடித்தாலும் இருவருமே மற்றவரது பலம் மற்றும் பலவீனத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான திறமைகள் இருக்கலாம். அதனால் குறைபாடு தெரியகூடாது என்று மற்றவரிடம் மறைப்பது உங்களுக்குள் இடைவெளியை அதிகப்படுத்தி காட்டும்.

அதனால் இருவருமே தங்கள் மனதுக்குள் இருக்கும் குறைகளை வெளிப்படையாக தெரிவிப்பதன் மூலம் நம்பிக்கை அதிகரிக்கும். நேர்மறையான இந்த செய் கைகள் உங்கள் துணையின் அன்பை அதிகமாக பெற்றுத்தரும்.

### எதிர்பார்ப்புகள் வேண்டாம்

எல்லா பணிகளையும் ஒருவர் தான் செய்ய வேண்டும் என்று ஒருவர் மீதே திணிப்பது பல பிரச்சினைகளை உண்டு செய்யகூடும். சிறிய விடயங்களை கூட மற்றவர் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்க கூடாது. தேநீர் போட மனைவியும், காய் வாங்க கணவரும் என்பது அவசியமல்ல. வழக்கமாக ஒரு வேலையை ஒருவரே செய்யும் போது அவரது துணை முன்கூட்டியே செய்து அசத்துவது இருவருக்குமே மகிழ்ச்சியான பொழுதாக இருக்கும்.

### பிரச்சினைகளை ஆற போடாதீர்கள்

சிறிய பிரச்சினைகளாக இருந்தாலும் அதை பேசி தீர்க்காமல் ஆறபோடுவது தம்பதியருக்கு எப்போதும் பிரச்சனை தான். இது மன அழுத்தத்தை உண்டாக்கும். நாள்பட்ட மன அழுத்தம் ஒரு கட்டத்தில் பெரிதாகும் போது ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டுதலிலேயே கழியும்.


இந்த நிலையில் இருவருமே அடுத்தவர் மீது பழிபோடுவதை காட்டிலும் தாங்கள் அந்த நேரத்தில் என்ன மாதிரியான செயலை செய்தோம் என்ன தவறு செய்தோம் என்பதை உணர்ந்து அதை மாற்றிக்கொள்ள முயற்சிக்கவும்.

முந்தானை முடிச்சு, தலையணை மந்திரம் என்பதெல்லாம் சும்மா வேடிக்கை பேச்சு அல்ல. மனதோடு இணைந்து துணையுடன் உறவுகொள்ளும் போது இருவருக்குமே நெருக்கம் அதிகரிக்க செய்யும். ஆதர்சன தம்பதியராக வாழ இந்த நெருக்கம் இருவருக்குமே அவசியம்.

எப்போதும் நெருக்கம் என்பது கடினமாக இருக்கலாம். அதனால் அவ்வப்போது ஊடலும் சின்ன சண்டையும் வரலாம். இது அதிகரிக்காமல் பார்த்துக்கொள்வது அவசியம். பிரச்சினையின் தீவிரம் அதிகரிக்காமல் அதிக வாக்குவாதங்களில் ஈடுபடாமல் இருப்பது தான் முக்கியம். அதே நேரம் சண்டையை நீண்ட நேரத்துக்கு கோவத்தை நீண்ட நாட்களுக்கு வளர்த்து கொள்ளவும் கூடாது.

இப்போது நீங்கள் தனி ஆள் கிடையாது. இருவரும் சேர்ந்து வாழும் உங்கள் வாழ்க்கையில் தன்னிச்சையான முடிவுகளுக்கு இடமளிக்காதீர்கள். சின்ன விடயங்களாக இருந்தாலும் பெரிய விடயங்களாக இருந்தாலும் அது இருவரின் கருத்துக்கும் உட்பட்டு எடுக்க வேண்டும். அப்போதுதான் மனதளவில் சிக்கல்கள் இல்லாமல் இருக்கும். ஒருவர் மீது ஒருவருக்கு நம்பிக்கையும் உண்டாகும்.

இரண்டு பேருக்கு நடுவில் நட்பும் குடும்பமும் அவசியம். குடும்ப விழாக்களை இருவருமே தவிர்க்க வேண்டாம். விழாக்கள் இல்லாத காலங்களிலும் நண்பர்களுக்கான விருந்து, குடும்பத்தில் விருந்து என்று இருந்தால் உங்கள் உறவு வட்டம் விரிவடையும். உங்கள் வாழ்க்கையில் நடக்கும் அனைத்து சங்கடமான காலங்களிலும் மகிழ்ச்சியான காலங்களிலும் எல்லோரும் இருப்பார்கள்.



# நேரத்தை உருப்படியாக செலவிட வழிகள்

நேரத்தை உருப்படியாக செலவிட தெரிந்து கொள்ளுங்கள் அதுதான் வெற்றிக்கான முதல் படி. தோல்வியை கண்டு பயப்படாமல், கீழே விழுவது வேகமாக எழுவதற்காக என்பதை புரிந்துகொள்ளுங்கள், நீங்களாகவே எழுந்து வரவேண்டும் உங்கள் தன்னம்பிக்கை தவிர வேறு எந்த கையையும் எதிர்பார்க்கதிங்க.

பிடித்த விடயங்கள் மட்டும் தான் செய்ய வேண்டும் என்று பிடிவாதமாக இருக்காதீர்கள், நீங்கள் செய் யும் பணிகளை பிடித்ததாக மாற்றிக் கொள்ளுங்கள்.

எதற்கும் பயப்படாமல், தேங்கி இருக்கும் குளம் போல் இல்லாமல் ஆறுகள் போல புதிய முயற்சி நோக்கி செல்லுங்கள்.

நமது எண்ணங்கள் தான் நம்மை உருவாக்கும் அதற்காக எப்பொழுதும் நல்லதே நினையுங்கள், எல்லாம் நன்மைக்கே என்று எப்பொழுதும் நேராக இருங்கள் எதிர்மறையான எண்ணங்களை உங்கள் அகராதியிலிருந்து துடைத்து எறியுங்கள்.

வாய்ப்புகள் எந்த நிமிடத்தில் வேண்டுமானாலும் வரும் அதனை நன்றாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும், உங்களுக்கான வாய்ப்புகளை நீங்களே உருவாக்குங்கள் நான் என்ற எண்ணத்தை விட்டுவிட்டு இறை நம்பிக்கையோடு உழைக்க கற்றுக்கொள்ளுங்கள்.

நாளை என்று எதையும் தள்ளிப்போடாதீர்கள். எந்த ஒரு முடிவையும் துணிச்சலாக எடுங்கள் வெற்றி பெற உழைப்புதான் முதல் சாவி அதனால் தின மும் உங்களுக்கான உழைக்கும் நேரத்தை எதற்காகவும் மாற்றிக்கொள்ளாதீர்கள். (படிப்பவர்களுக்கு படிப்புதான் உழைப்பு) உயர்ந்த இடம் உடனடியாக கிடைத்து விடாது, ஒவ்வொரு படியாக, மெதுவாக ஆனால் உறுதியாக முன்னேறுங்கள்.

உங்கள் மீது தவறு இருந்தால் யார் சொன்னாலும் திருத்திக்கொள்ளுங்கள், அதே நேரம் தவறு உங்கள் மீது இல்லை என்றால் யார் எதிர்த்தாலும் செய்து முடியுங்கள்.

இறுதியாக வாழ்க்கையில் பணத்தால் மட்டும் சந்தோஷம்வருவது இல்லை, உங்கள் உடன் இருப்பவர்களையும் நேசிக்க கற்றுக்கொள்ளுங்கள்.

# உங்களை மகிழ்ச்சியாக வைக்க தேவையான 10 உதவிக் குறிப்புகள்

நாம் அனைவரும் எப்போதும் மகிழ்ச்சியாக உணர விரும்புகிறோம். ஆனால் நாம் நினைப்பதெல்லாம் எப்போதும் நடந்து விடுவதில்லை. எனவே உங்களை மகிழ்ச்சியாக வைக்க தேவையான சில உதவிக்குறிப்புகளை பார்ப்போம். வாழ்க்கை கடினமானது தான். மேலும் அதன் பல சவால்களைச் சமாளிப்பது நமக்கு மன அழுத்தத்தை கொடுக்கலாம். ஆனால் ஒரு சில உதவிக்குறிப்புகள் மற்றும் தந்திரங்கள் மூலம் வாழ்க்கையில் சந்தோஷமாக இருக்க முடியும்.



### எப்போதும் நேர்மறையாக (Positive) இருங்கள்:-

இது உங்களுக்கு ஏற்கனவே தெரிந்த ஒன்று தானே என நீங்கள் நினைக்கலாம். ஆனால் இதனை பழக்கப்படுத்துவதற்கு நேரம் எடுக்கும். உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு சாதகமாக நடந்த விடயங்களை நினைத்து பார்க்க ஒரு நிமிடம் அல்லது இரண்டு நிமிட நேரம் செலவிட முயற்சிக்கவும். ஒரு நாளைக்கு குறைந்தது மூன்று முறையாவது இதைச் செய்யுங்கள். தொடர்ந்து 45 நாள்களுக்கு இதனைச் செய்யுங்கள்.

### எதையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் முக்கியம்:-

எப்போதும் எல்லா விடயங்களும் சரியாக இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். ஆனால் நீங்கள் உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்க விரும்பினால், நடப்பவற்றை ஏற்றுக்கொள்ள கற்றுக்கொள்ளுங்கள். உங்களால் முடிந்தவரை இதனை முயற்சி செய்யுங்கள்.

### இயற்கையில் நேரத்தை செலவிடுங்கள்:

நாம் அதிக நேரம் வீட்டுக்குள்ளேயே இருக்கிறோம். எப்போதும் கணனி அல்லது தொலைபேசியில் நேரத்தை செலவிடுகிறோம். எனவே இவற்றை எல்லாம் ஒதுக்கி விட்டு, நீங்கள் சிறிது நேரம் உங்களைச் சுற்றியுள்ள சூழலில் நேரத்தை செலவிட வேண்டும். இயற்கை உங்களை குணப்படுத்தும்.

### அதிக பணம் செலவு செய்ய வேண்டாம்:

நீங்கள் விரும்பும் அனைத்தையும் வாங்க நிறைய பணம் செலவழிக்க வேண்டி இருக்கும். இது உங்களை மகிழ்ச்சியாக வைக்கும் என நீங்கள் நம்பலாம். ஆனால் உண்மையில் பணத்தை நீங்கள் புத்திசாலித்தனமாக செலவிட்டால், இறுதியில் நல்ல பலன் கிடைக்கும்.

காலைக்கதிர் Kalaikkathir

# Construct Passive Sentences in Simple Past tense

The format of constructing sentences in passive is object+ was/were+ V3 (past participle) + by + subject

Eg: They built the bridge in 1975. (active voice)

Subject: they
Verb : built
Object : the bridge
The bridge was built by them in 1975. (passive voice)
Step 1: Write the object
Step 2: If it is singular so we should add **was**, if it is plural we should add were.
Step 3: Write the $V_3$ (past participle) of verb
Step 4: Write by and subject.

**Let's practise**

1. They sold all the newspapers last week.
2. The manager signed the letters.
3. My neighbour's dog bit me yesterday.
4. They broadcasted the election results last night.
5. The principal punished Dick for breaking a window.
6. They passed the bill in parliament.
7. They called me for the interview.
8. The Prime Minister unveiled the portrait.
9. The thief snatched her handbag yesterday.
10. Somebody found the missing boy.

**Answers**

1. All the newspapers were sold by them last week.
2. The letters were signed by the manager.
3. I was bitten by my neighbour's dog yesterday.
4. The election results were broadcasted by them last night.
5. Dick was punished by the principal for breaking a window.
6. The bill was passed by them in parliament.
7. I was called by them for the interview.
8. The portrait was unveiled by the Prime Minister.
9. Her handbag was snatched by the thief yesterday.
10. The missing boy was found by somebody.

Vinuja Sivananthan
2023 A/L Bio
Kn/ Palai Central College

# Describing a table

The following table shows the list of most-played mobile games by players in 2021. Study the table and write a description. Use about 150 words.

The following words will help you:

Highest, Lowest, Not only…but also, Almost equal, Both…and

| Games | Downloads (numbers) | Downloads (percentage) |
|---|---|---|
| PUBG Mobile | 1 billion | 22.9% |
| Subway Surfers | 997 million | 22.1% |
| Fruit Ninja | 500 million | 16% |
| Candy Crush Saga | 450 million | 14% |
| Angry Birds | 350 million | 12% |
| Homescapes | 350 million | 12% |

The above table illustrates some interesting information about the list of most played mobile games by players in 2021. The six names of games directly mentioned in the above table. They are PUBG Mobile, Subway Surfers, Candy Crush Saga, Fruit Ninja, Angry birds and Homescapes. The information is given in numbers and percentage.

The highest number of players like to play PUBG Mobile, which is 22.9%. Nine hundred and ninety-seven million players adore to play Subway Surfers, which is 22.1%. Five hundred million players love to play Fruit Ninja, which is 16%. Four hundred and fifty players desire Candy Crush Saga, which is 14%. Three hundred fifty players prefer to play Angry Birds and Homescapes. It is interesting to note that almost an equal percentage of players enjoy to play both PUBG and Subway Surfers. Overall, more people are playing PUBG than the other games.

To conclude, PUBG is the most popular game and the least popular games are Angry Birds and Homes capes.

Subeedshana Jeyakanth
2023 A/L Bio
Kn/ Palai Central College

# The job I like most



There are many types of jobs in this world. My most favourite job is business. Business people are the backbone of the economy. It is a challenging job because it has risks. A businessman not only builds company, he also builds the person's trust. There are many business men in this world. They are Mr.Jeff bozez, Mr.Bill Gates, Mr. Dhammika Perera, Mr. Mark and Mr. Perera etc but my favourite person is Mr. Jeff bozez. He is my role model too. I have a knack for business and I will definitely become a great businessman one day.

Kajani Sasikumar
Grade 11A
Vavuniya Saivapragasa Ladies College

Learning English by reading newspapers is a good habit. Newspapers are reliable source to expand your English vocabulary. It can also improve your spoken English as you read aloud the articles. We are publishing articles every Sunday to accelerate the English Language skills of school children in this outbreak.
**Articles are welcomed from school children and they can be emailed to kalaikkathiredu@gmail.com**

காலைக்கதிர்
Kalaikkathir

# Interesting facts about English






1. Some words do not have a singular form.
2. A pangram sentence is one that contains every letter in the English language.
3. A new word is added to the dictionary every two hours.
4. The word "Uncopyrightable" is the longest English word in normal use that contains no more letter more than one.
5. More English words begin with the letter "S" than any other letter of the alphabet.
6. "I am" is the shortest complete se ntence in the English language.
7. The dictionary grows by about 4000 words a year.
8. The following sentence contains all 26 letters of the alphabet :
   ***"The quick brown fox jumps over the lazy dog".***
9. "Rhythm" is the longest English word without a vowel.
10. "Almost" is the longest word in the English language with all letters in alphabetical order.
11. The day after tomorrow is overmorrow.
12. "Time" is the most ordinarily used noun in English.
13. The word "set" has the highest range of definitions in the dictionary.
14. The dot on the top of the letter "i" is called tittle.
15. 80% of all written paragraphs in English feature the word "The".
16. No word in the English language rhymes with month, orange, silver or purple.
17. The oldest English word that is still in use is "Town".
18. English is the language of air.
19. The word "Queue" is pronounced the same way when the last four letters are removed.
20. A new word in English is created every 98 minutes.
21. 'Pronounciation' is the word which is most mispronounced in the English language.
22. The longest word in English has fourty-five letters.
23. Shakespeare added more than 1000 words to the English language.
24. Most English words come from French or old English.
25. "E" is the most commonly used letter.

Rasiyasingam Rasika
13 Arts
J/Neliyadi Central College




# My favourite story book

My favourite story book's name is Ramayanam. It is a novel, written by the famous writer Vethaaviyasar. It is an interesting story book. Raman and Ladsumanan are the main characters in the story. They are sons of the King Tasarathan. Ramayanam is one of the main epics of the Hindu religion. It is a sacred book which teaches us about life. Ramayanam teaches us about our duties. It teaches everyone to become dutiful, loving and respectful towards others.

Vasanthan Kabikiyushna
Grade 6E
Kn/ Kilinochchi Maha Vidyalayam





# My classroom

This is my classroom.
It is very big.
The walls are white.
It is on the $2^{nd}$ floor.
There are many pictures, maps and calendar on the wall.
My classroom is beautiful and nice.
I love my classroom.




Sayanthan Shriiharii
Grade 3A
St.John Bosco 's vidyalayam.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர்.
'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர்.
இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 41

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்


**131. ஐரோப்பாவிலிருந்த புலம் பெயர் அமைப்புக்களில் மேல் கிட்டுவின் தாக்கம் என்ன?**

ஐரோப்பாவில் மாத்திரமல்ல, விடுதலைப் புலிகளின் சர்வதேச அமைப்புக்கள் எல்லாவற்றிலுமே கிட்டு கவனம் செலுத்தினார். இயக்கத்தின் அடிமட்டத்திலிருந்து எல்லோராலும் நன்கு அறியப்பட்ட தளபதியாக வெளியூர் சென்ற அங்கத்தவர் கிட்டு. உள்ளேயிருந்த பல அபிப்பிராயங்களால், பிரபாகரனே கிட்டுவை வெளியுலகத்திற்கு அனுப்பி வைத்தார். கிட்டு ஒரு தீரம் நிறைந்த போராளி மட்டுமல்ல, எதிரியைப் பொறுத்தவரை கண்மூடித்தனமான கோபங்கள் கொண்டவர். ஆனால் அதே எதிரிகளுடன் நேசமாகப் பழகவும், ஆளுமைகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவும் தெரிந்தவர். இலங்கை – இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் என்றாலும், இராணுவப் படைகளின் மூத்த தலைவர் என்றாலும், ராஜதந்திரிகள், நட்புநாடுகளின் பிரதிநிதிகள், நேசசக்திகளைச் சேர்ந்தோர் யாரோடும் இலகுவில் பழகும் திறனும் அவர்களை நம்பிக்கையோடு நடத்துவதிலும் திறமை கொண்டிருந்தார். இங்கிலாந்து சென்றவுடன் தொலைபேசி ஊடாக வகுப்புக்களில் ஆங்கிலம் படித்து அதனை சரளமாக விளங்கிக் கொள்ள – சம்பாஷிக்க – கற்றுக் கொண்டார்.

அதனால் அவர் சந்தித்த பலம் மிக்க அரச அதிகாரிகள், அரசு சார நிறுவனங்களின் பிரதிநிதிகளோடு ஆங்கிலத்திலேயே உரையாடி விளக்கங்கள் கொடுக்கக் கூடியதாயிற்று. விடுதலைப் புலிகளின் அமைப்பிலும் அது சார்ந்து இயங்கிய நிறுவனங்களிலும் – முக்கியமாக ஐரோப்பிய மட்டத்தில் – பல மாற்றங்கள், சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து, திருப்தி,அதிருப்தி என்பவற்றால் மனம் தளராது அவற்றை அமுல்படுத்தினார். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக வெளிவந்து கொண்டிருந்த பல சஞ்சிகைகளை அந்த நேரத் தேவைகளையொட்டிய பிரச்சாரத்துக்கு ஏதுவாக நெறிப்படுத்தினார்.

சத்தியேந்திராவுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படுத்தி, அவரது திறமைகளை தமிழீழ விடுதலைக்கு ஆதரவு தரும் முறையில் சஞ்சிகைகளில் எழுத்தாக்கங்களைக் கொண்டு வர ஏற்பாடுகள் மேற்கொண்டார். தீவிரமாகப் பெருமளவில் தங்களது நிலைக்கு ஆதரவாக அவர்களை இயங்க வைத்தார்.

சத்தியேந்திரா திம்பு மாநாட்டில் ரெலோ சார்பில் பங்குபற்றிய போதும் அதற்கு முன்னைய தயாரிப்பு தினங்களில் "இந்தியா எங்களுக்கான அரசியலைப் பார்க்க வேண்டும். விடுதலைப் போராளிகள் அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்" என்ற கருத்துக்கள் கொண்டிருந்தார். ஆனால் திம்புவின் பின் நடந்த நாடு




கடத்தல்கள், வெளிவிவகாரச் செயலாளர் ரொமேஷ் பண்டாரியுடனான வாக்குவாதங்கள் போன்றன அவருக்கு இந்தியா பால் கசப்புணர்வுகளை ஏற்படுத்தியிருந்தன. ஆனாலும் ஸ்ரீலங்கா அரசின் அடக்கு முறைகள் நீடித்தமையால் அவரது ஈடுபாடு தொடர்ந்து கொண்டிருந்தது. கிட்டுவின் எதிர்பார்ப்பில் அவர் சர்வதேச



கிட்டுவின் மறைவின்போது தீருவில் நிகழ்வில் தலைவர் பிரபாகரனைக் கட்டி அழும் கிட்டம்மா.

பொறுப்பாளர் பொறுப்பை ஏற்று அவர்களின் சர்வதேச பேச்சாளராக பணியாற்றுவார் என எண்ணப்பட்டது. விடுதலைப்புலிகளின் புலம் பெயர் அமைப்புக்களில் தொடர்ந்த சில உட்பூசல்கள், லண்டனில் இருந்த அதிகாரப் போட்டிகளால் அது, கிட்டு அங்கிருந்து வெளியேறிய பின் சாத்தியமற்றதாக இருந்தது.

சத்தியேந்திரா புலிகளின் நிலைப்பாட்டிற்கு ஆதரவாக எழுதியவையும், பேசியவையும் அவர்களைத் தவிர வேறு சக்திகள் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பது சாத்தியமற்றது என்ற கூற்றுக்களும் இந்தியாவை ஈழத்தமிழர்களிடமிருந்து அந்நியத்திலேயே வைத்தன. சட்டப்படி அவை நியாயப்படுத்தப்பட்டாலும் நடைமுறை அரசியலுக்கு அது உவப்பாகவில்லை.

**132. கிட்டு அதைஒட்டி நடவடிக்கைகள் எடுத்தாரா?**

சத்தியேந்திராவை சர்வதேசப் பேச்சாளராகச் சேர்த்து கொள்ள வேண்டும் என வெளிப்படையான அபிப்பிராயங்கள் தெரிவித்து பலருடனும் கலந்துரையாடல்கள் நடந்தன. ஆனாலும் கிட்டு லண்டனுக்கு வருமுன்னேயே ஊறியிருந்த சிலர் சந்தியேந்திராவுக்குக் கீழாகவோ அல்லது இணைந்தோ வேலை செய்ய விரும்பமில்லாதிருந்தார்கள். அவரை அவர்களது சஞ்சிகைகளுக்கு பொறுப்பாக நியமிக்க விரும்பினார்கள். அது எடுபடவில்லை.

ஐரோப்பாவில் இயக்கத்தின் அமைப்புக்களிலிருந்த பலரும், பொதுமக்களும், கிட்டு தொடர்ந்தும் அங்கிருந்து வேலை செய்வதை விரும்பினார்கள். சத்தியேந்திரா போன்றவர்களின் இணைப்புகளுக்கு இது உதவிகள் செய்யும் என எதிர்பார்க்கப்பட்டது.

கிட்டு சில சம்பவங்களை கையாண்டு சமாளித்த விதங்களே அவர் தொடர்ந்து இந்த நிலைமைகளை முற்றுகையிட வேண்டும் என பலர் விரும்பக் காரணமாயிற்று.

ஒரு சம்பவத்தில் நான் ஈடுபட்டமையால் அதைத் தருகிறேன்.

86 ஆம் ஆண்டுப் பகுதிகளில் நான் மெல்போனில் அகஸ்தி அந்தஸ்து கோரிய ஓர்இளைஞனுக்கு உதவி செய்தேன். அதில் ஏற்பட்ட பழக்கங்களினால் தனது விடயங்களைச்சொன்னார். தான் விடுதலைப் புலிகளின் அங்கத்துவனாகி, அவர்களுக்காக கிட்டுவின் கட்டுப்பாட்டில் இருந்த குழுவுடன் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் நகைகள் சேர்த்த காலத்தில் அதில் தானும் இன்னொருவரும் சில நகைகளை மறைத்து விட்டு மீதங்களையே அமைப்பிடம் கொடுத்தார்களாம். பின்னர் சில வீட்டுக்காரர்கள் அந்த நகைகளுக்காக அமைப்பிடம் திருப்பித் தருமாறு விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்ட போது, அவை கணக்கில் வரவேயில்லை என்பது விசாரணையில் தெரிந்து, தனதும் சகாவினதும் கைங்கரியம் வெளிப்பட இயக்க விதிகளின் படி அவர்கள் போடப்பட வேண்டும் என்று தனிமையில் வைக்கப் பட்டனர். தாங்களும் கதியை நொந்து தனிமையில் இருந்த போது தனிப்பட்ட முறையில் தங்கள் பக்கத்து நியாயங்களையும் கிட்டுவிற்கு முறை செய்ய, அவர் இயக்கக் கட்டுப்பாடுகளை மீற முடியாது, ஆனால் பேசுகிறேன் என்றிருந்தாராம். ஒருநாள் இரவு சாப்பாட்டிற்கு பிறகு அவர்களிடமிருந்த துப்பாக்கிகள் மீளப் பெறப்பட அன்றிரவே அல்லது விடியல் நேரத்திலோ தாங்கள் போடப்படுவோம் என்று உணர்ந்து, கண் கலங்கி, ஒருவரை ஒருவர் தேற்றக் கூடியதாக மட்டும்தான் இருந்ததாம். நடுச்சாமம் கழித்து மற்றவர்கள் நித்திரையில் இருக்க கிட்டு அவர்களின் அருகில் வந்து எழுப்பி, 'நான் மேலிடத்தில் கதைத்துள்ளேன். ஆகவே இனி அது எனது பிரச்சினை. நீங்கள் என்னோடு வாருங்கள். வீதியில் விட்டு விடுகிறேன். அங்கிருந்து தப்புவதும்,




பிடிபடாமல் இருப்பதும் உங்களைப் பொறுத்தது' என்று முகாமிலிருந்து வெளியே விட்டாராம். அதில் தெய்வாதீனமாகத் தப்பி ஒருவழியாக வந்து சேர்ந்ததைச் சொன்னார்.

நான் அவரிடம் கிட்டு தனது கால் போனதற்கு குண்டு வைத்தவர்களாகச் சந்தேகித்து கைது செய்தவர்களை ஈவிரக்கமில்லாமல் சுட்டுக் கொன்றதை பற்றி பேசிய போது, அவர் அது எதிரிகளை பார்த்த விதம். எங்களை நடத்திய விதம் வேறு. விடுதலைக்கு என்று தங்களோடு சேர்ந்தவரை பார்த்து வித்தியாசம் என்று விளங்கப்படுத்தினார்.

இந்த இளைஞன் உணர்ச்சிகளில் விடுதலை இயக்கங்களில் சேர்ந்து இருந்தாலும் இயக்க விசுவாசியாக எனக்குத் தோன்றவில்லை. இங்கு அவர்களுக்கு சில தேவைகளுக்கு எட்ட நின்று உதவினாலும், சேர்ந்து அவர்களின் ஆதரவாளராக இயங்கவில்லை. தன்பாடு, தனது அகதி விண்ணப்பம்,வேலை என்றுதான் இருந்தார். விடுதலைப்புலிகளின் இயக்கத்திலிருந்தேன் என்று இங்குள்ளவர்களிடம் சொன்னாரோ என்பது கூடத் தெரியாது.


(வளரும்.....)

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியக் கலாச்சாரம் உலகிற்கு கொடுத்த அரிய கொடை யோகா!

நாளை – ஜூன் 21 ஆம் திகதி – ஏழாவது பன்னாட்டு யோகா நாள் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. வழமை போல வடக்கிலும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் பங்களிப்புடன் இந்த நிகழ்வு, கொரோனாக் கட்டுப்பாட்டு விதிகளுக்கு அமைய நடத்தப்படுகின்றன. அதையொட்டி இந்தியத் துணைத் தூதுவர் க. பாலச்சந்திரனுடன் ஓர் உரையாடல் இது.

## இந்தியத் துணைத் தூதுவர் பாலச்சந்திரன் பெருமிதம்



**கேள்வி :- அண்மைய சில வருடங்களாக யோகா அல்லது யோகாசனம் பற்றி அதிகமாக பேசப்படுகிறது. அந்த வகையில் யோகா பற்றி சற்று குறிப்பிட முடியுமா?**

பதில் :- முதற்கண், இன்றைய நோய்த் தொற்று சூழ்நிலையில் மக்கள் அனைவரும் வீடுகளிலே பாதுகாப்பாக இருக்கவும் சுகாதாரப் பகுதியினரால் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களை முறையாக கடைப் பிடித்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

### யோகா

இந்தியக் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் இந்த உலகிற்கு கொடுத்த ஓர் அரிய கொடை யோகா.

யுஜ் என்னும் சமஸ்கிருத சொல்லில் இருந்த வந்த யோகா என்னும் சொல்லுக்கு, தனிப்பட்டவரின் நனவுநிலை அல்லது ஆன்மா பிரபஞ்ச சக்தியுடன் இணைதல் என்று அர்த்தம். யோகா என்பது இந்தியாவின் 5,000 ஆண்டு பழைமை வாய்ந்த உடல் சார்ந்த அறிவு. யோகா என்பதைப் பலர், உடல் வளைதல், திரும்புதல், நீட்டுதல், மூச்சினை எடுத்து விடுதல் போன்ற சிக்கலான உடற்பயிற்சி என்று நினைக்கக்கூடும். இவையனைத்தும், உள்ளிருக்கும் மனித மனதின் ஆன்மாவின் எல்லையற்ற சக்தியைத் திறந்து திறனை அதிகரிக்கும் ஆழமான அறிவியலைப் பற்றிய மேலோட்டமான கருத்துகள்.

யோகா என்பதே, தன்னுள் எப்படி வாழ வேண்டு மெனும் வாழ்க்கையின் சாரத்தைப் பொதிந்து வைத்திருக்கும் அறிவியல் ஆகும்.

இயந்திரமயமாகிவிட்ட வாழ்வில், உடல் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியது மிகவும் அவசியம். அந்த வகையில், உடலுக்கும், மனதிற்கும் ஆரோக்கியத்தை அளிப்பதில், யோகா, தியானம் ஆகியவை பெரும்பங்கு வகிக்கின்றன.

## நாளை பன்னாட்டு யோகா தினம்

உடல், மூச்சு, உள்ளம், ஆளுமை, மனம் என்று பல தளங்களில் யோகா வேலை செய்கின்றது. அதனால்தான் யோகா பயிற்சியை அன்றாடம் மேற்கொண்டு பல அற்புதப் பலனை அனுபவித்துள்ளனர் நம் முன்னோர்கள். இந்தியர்களைப் பொறுத்த வரை இதை ஒரு வகையிலான பாரம்பரிய மருத்துவம் என்றே கூறலாம்.

அந்த யோகாப் பயிற்சியின் பலனாகத்தான் நம் முன்னோர்கள் பலர் மெய், வாய், செவி, கண், மூக்கு என ஐம்புலன்களையும் அடக்கி நூறு வயது வரை ஆரோக்கியமாக வாழ்ந்தனர் என்பதே உண்மை. ஆனால், நவீனமாகிவிட்ட இன்றைய காலகட்டத்தில் யோகாவின் பலனை அனுபவிக்க நம்மில் பலரும் மறந்து வருகிறோம்.

தினமும் யோக செய்வதன் மூலம் நாம் நோய்களிலிருந்தும் விடுபடலாம். யோகா நோய்களை எதிர்த்துப் போராடும் சக்தியை அதிகரிக்கிறது. சர்க்கரை நோய், இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்க உதவுகிறது. இரத்தத்தில் உள்ள கொழுப்பைக் கரைக்க உதவுகிறது. யோகாவின் மூலம் இதய நோய்களைக் கூட குணப்படுத்த முடியும். இதனால் இரத்த ஓட்டம் சீரடைந்து, இரத்த அடைப்பை போக்கி, ஆரோக்கியமான இதயத்தை பெற முடியும். யோகா செய்வதால் நுரையீரல்களைச் சீர்படுத்தி சீரான சுவாசத்தைப் பெறலாம். அதிலும் ஆழமான மூச்சுப் பயிற்சி உடல் வலிமையைக் கூட்டி மன அழுத்தத்தை நீக்கும்.

யோகா தொடர்பில் என்னால் வழங்கக் கூடிய சிறிய விளக்கம் இதுவே. யோகாசன வல்லுனர்களிடம் இது தொடர்பில் நீங்கள் மேலதிக விளக்கத்தைக் பெற்றுக் கொள்ளலாம்..

பொதுவாக, யோகா என்பது நாம் அன்றாடம் செய்ய வேண்டிய பயிற்சியாகும். ஒரு சில யோகாசனங்களையாவது நாம் தேர்ந்தெடுத்துக் கொண்டு நமது அன்றாட வாழ்வின் பயிற்சியாக அவற்றை செய்வது நமக்கு நீடித்த நலம் பயக்கும்.

**கேள்வி: - அண்மைய சில வருடங்களாக இதற்கு ஏன் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது?**

பதில்: - ஐயாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த யோகாக்கலையின் பெருமையை உலகம் முழுவதும் பரவச்செய்யும் வகையில் பாரதப் பிரதமர் மாண்புமிகு நரேந்திரமோடி அவர்களால் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் 27 செப்ரெம்பர் 2014 அன்று பன்னாட்டு யோகா நாள் தொடர்பான திட்டம் முன்மொழியப்பட்டது. இதை அடுத்து ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் 75 நாள்களுக்குள் ஒரு வரைவுத் தீர்மானம் தயாரிக்கப்பட்டு பொதுச்சபையில் அங்கம் வகிக்கும் 193 நாடுகளில் 177 நாடுகளின் ஏகோபித்த ஆதரவில் ஜூன் 21 அன்றைய நாளை பன்னாட்டு யோகா நாளாக ஐக்கிய நாடுகள் சபையால் ஏகமனதாக பிரகடனப்படுத்தப்பட்டது.

அதன் பின்னர் கடந்த 2015 ஜூன் 21 ஆம் திகதியிலிருந்து உலகெங்கும் பன்னாட்டு யோகா நாள் நிகழ்வுகள் கொண்டாடப்பட்டு வருகின்றன. அந்த வகையில் உலகெங்கும் உள்ள இந்தியத் தூதரகங்கள் இதற்கான சிறப்பு நிகழ்வுகளை நடாத்தி வருகின்றன. அந்த வகையில் நாமும் அதாவது யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரகமும் பல நிகழ்வுகளை நடாத்தி வருகின்றோம். அந்த வகையில் இவ் வருடம் பன்னாட்டு யோகா நிகழ்வுகள் ஏழாவது வருடமாக கொண்டாடப்படுகின்றது.

சமீப காலமாக யோகாவின் முக்கியத்துவத்தை பல நாடுகளும் புரிந்து கொண்டு இந்த வாழ்க்கை முறையினைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள இந்தியாவின் உதவியை நாடுகின்றன.

**கேள்வி:- பன்னாட்டு யோகா நாளாக ஜூன் 21 அன்றைய நாள் தெரிவு செய்யப்பட்டதற்கு ஏதாவது சிறப்பான காரணம் உள்ளதா?**

பதில்:- ஆம்.

அனைத்துலக யோகா நாளாக ஜூன் 21ஆனது ஐக்கிய நாடுகள் சபையில் முன்மொழியப்பட்டதற்கான முக்கிய காரணம் என்னவென்றால், இரண்டு கதிர்த் திருப்பங்களில் ஒன்று நிகழும் ஜூன் 21. அன்றைய நாள் வடக்கு அரைக்கோளத்தில் மிக நீண்ட நாளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது..

**கேள்வி:- சற்று விளக்கமாக கூற முடியுமா?**

பதில்: நிச்சயமாக. சூரியன் ஆறுமாதங்கள் தெற்கில் இருந்து வடக்காகவும் ஆறு மாதங்கள் வடக்கில் இருந்து தெற்காகவும் நகர்கிறார். சித்திரை முதல் ஆனி முடிய உத்தராயணம். சூரியன் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி நகர்வார். ஆடி முதல் மார்கழி வரை தட்சிணாயணம். சூரியன் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி நகரும் காலம். உத்தராயணம் காலத்தில் பகல் பொழுது அதிகமாக இருக்கும். தட்சிணாயணம் காலத்தில் பகல் பொழுது படிப்படியாக குறையத் தொடங்கும். உத்தராயண காலத்தின் கடைசி மாதம் ஆனி. வடக்கு நோக்கி நகர்ந்து வரும் சூரியன் பூமிப் பந்தின் வடக்கு மூலையில் இருப்பதால் ஜூன் 21ஆம் திகதி நீண்ட நேரம் சூரிய ஒளி தெரியும். அன்றைய தினத்தின் பகல் ஆண்டிலேயே நீண்டதாக இருக்கும்.

அன்றைய தினம் சூரியன் சீக்கிரம் உதயமாகி விடும். மறைவதற்கு மிக தாமதமாகும். அப்படியான சிறப்பான நாளே பன்னாட்டு யோகா நாளுக்காக முன்மொழியப்பட்டது.

**கேள்வி:- யோகா தொடர்பான விழிப்புணர்விற்காக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரகமும் செயற்பட்டு வருவதாக தெரிவித்திருந்தீர்கள். அது பற்றி சற்று விளக்கமாக கூற முடியுமா?**

பதில்:- இது பற்றி நிச்சயமாக ஊடகவியலாளர்களாகிய உங்களுக்கு அதிகம் தெரிந்திருக்கும். ஏனெனில் எமது அனைத்து நிகழ்வுகளிலும் நீங்கள் இருக்கின்றீர்கள். ஆனாலும் பதிலளிக்க வேண்டியதால் சுருக்கமாகக் கூறுகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் முதலாவது பன்னாட்டு யோகா நாள் வெகு சிறப்பாக இடம்பெற்றிருந்தமை நீங்கள் அறிந்ததே. அன்றிலிருந்து இன்று வரை பன்னாட்டு யோகா நாள் நிகழ்வுகள் இங்கு மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றன.

இதனை விட எமது தூதரகத்தினால் யோகா பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. பல ஆர்வலர்கள் இவற்றில் இணைந்து பயன் பெற்று வருகின்றனர். மேலும் யோகாசனம் பயிற்சிப் பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள் பல நடத்தப்பட்டுள்ளன.

பல்லாயிரக்கணக்கான பங்குபற்றுநர்களைக் கொண்ட மிகப் பெரியளவிலான யோகா நிகழ்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. இவற்றுக்கான மேலதிகமான விவரங்களையும் படங்களையும் தூதரக இணையத் தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**கேள்வி:- தங்களது செயற்பாடுகள் யாழ்ப்பாணத்துக்குள் மட்டுமே இடம்பெற்றுவருவதாக ஒரு குற்றச்சாட்டு உள்ளதே. அது தொடர்பில்......?**

பதில்:- எமது தூதரக இணையத்தளத்தில் எமது செயற்பாடுகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றிலிருந்தே நீங்கள் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ளலாம்.

ஆயினும் சில விடயங்களை தெளிவுபடுத்துகிறேன்.

இது யோகா பற்றிய ஒரு சந்திப்பாக இருப்பதால், அதுபற்றி சில விடயங்களை கூற விரும்புகின்றேன்.

முதலாவது பன்னாட்டு யோகா நாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றபோது அதற்கு சில மாதங்கள் முன்னதாகவே வடக்கு மாகாணத்தில் உள்ள பல பாடசாலைகளில் சிறப்பு யோகா பயிற்சிகள் எம்மால் வழங்கப்பட்டிருந்தன. அன்றிலிருந்து வருடாந்தம் பன்னாட்டு யோகா நாள் நிகழ்வுகளையொட்டி வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் சிறப்பு யோகாப் பயிற்சிகள் தூதரக ஏற்பாட்டில் வழங்கப்பட்டு வருகின்றன.

இதைத் தவிர வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கானவர்களின் பங்குபற்றுதலுடன் பன்னாட்டு யோகா நாள் நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன. இந்த நிகழ்வுகளுக்கான யோகாப் பயிற்சிகளை தூதரகத்துடன் இணைந்து மேற்கொண்ட வடக்கு மாகாணத்திலுள்ள யோகா வல்லுனர்களுக்கு இத்தருணத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அண்மைய இரு வருட யோகா நாள் நிகழ்வுகள் கொரோனா தீநுண்மீ தாக்கத்தினால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை அனைவரும் அறிந்ததே.

(17 பக்கம் பார்க்க)

காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழில் கடந்த சில வாரங்களாக யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு - மன்னார் - திருகோணமலை ஆகிய இலங்கையின் தமிழ் மறைமாவட்டங்களை இணைத்து வட கிழக்கு ஆயர்மன்றம் ஒன்றை உருவாக்குவது பற்றி பலரின் எண்ணங்களையும் ஏக்கங்களையும் எதிர்பார்ப்புக்களையும் வெளியிட்டு வந்தோம்.

இந்த ஆக்கங்களை முகநூலில் பதிவு செய்த போது பலர் தம் கருத்துக்களை முகநூலிலும் நேரடியாகவும் தெரிவித்துக் கொண்டே உள்ளனர். அவற்றைத் ஆக்கங்களாக்கித் தரும்படி கேட்டுள்ளோம். வேறும் சிலரிடமும் ஆக்கங்களைக் கேட்டுள்ளோம். தொடர்ந்தும் வெளியிடுவோம்.

இவ்வாரம் மட்டக்களப்பு மறைமாவட்டக் குரு முதல்வர் ஞானப்பிரகாசம் அலெக்ஸ் றெபேட் அடிகள் தம் எண்ணங்களைப் பகிர்கிறார். ஞானப்பிரகாசம் அலெக்ஸ் றெபேட் அடிகளார் 2021ஆம் ஆண்டு முதல் மட்டக்களப்பு மறைமாவட்டக் குரு முதல்வராகவும் இருதயபுரம் பங்கின் பங்குத் தந்தையாகவும் பணியாற்றி வருகிறார். 2018ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டுவரை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் சமூக சேவை அமைப்பான எகெட் நிறுவனத்தின் இயக்குனரானவும் 2016 ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு மறைக் கோட்டத்தில் ஆயரின் பிரதிநிதியாகவும் பணியாற்றியுள்ளார்.

குருத்துவ இறையியல் கல்வியை நிறைவு செய்தபோது இறையியல் இளங்கலைமாணிப் பட்டத்தைப் பெற்ற இவர் 2009 2012 காலப்பகுதியில் உரோமை சென்று உர்பாணியானா பல்கலைக்கழகத்தில் இறையியல் முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றார்.

2013ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டுவரை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கத்தோலிக்க ஆன்மீக இயக்குனராகப் பணியாற்றிய இவர் 2013ஆம் ஆண்டு முதல் இன்றுவரை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவத்துறையில் வருகை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார்.

1999ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் 2000ஆண்டு வரை வாகுக்கல்முனையின் உதவிப் பங்குத்தந்தை தேற்றாதீவுப்பங்கின்பதில்பங்குத்தந்தையாகவும்பணியாற்றியுள்ளார். இவர் 2001 முதல் 2003 வரை வாழைச்சேனைப் பங்கின் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய இவர் 2003 முதல் 2009 வரை கல்முனைப் பங்கின் பங்குத் தந்தையாகவும் கல்முனைப் மறைக்கோட்ட வின்சென்டி போல் சபையின் ஆன்மீக இயக்குனராகவும் பணியாற்றியுள்ளார்.

2012 முதல் 2015 வரை தென்னாமுனைப் பங்கின் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய இவர் 2015 முதல் 2017 வரை தாண்டவன்வெளிப் பங்கின் பங்குத் தந்தையாகவும் மட்டக்களப்பு மறைக் கோட்ட வின்சென்டி போல் சபையின் ஆன்மீக இயக்குனராகவும் பணியாற்றியுள்ள இவரின் கருத்துக்களை இங்கு நோக்குவோம்.

# இலங்கைத் திருஅவையின் வளர்ச்சிப் பாதையில் வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் ஒரு படிக்கல்தான்!

## அன்றி தடைக்கல்லே அல்ல என்கிறார் மட்டு. மறை மாவட்ட குரு முதல்வர்

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் இன்றைய உலகில் திருஅவை பற்றிய அருள்பணிக் கோட்பாட்டு விளக்கம் இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு மனிதனுடைய மகிழ்ச்சியையும் எதிர்நோக்கையும் ஏக்கத்தையும்கவலையையும்திருஅவையினுடையதாகவே காண்கின்றது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் ஆயர்களை மந்தையின் மன(ண)ம் (உணர்வு தேவை) அறிந்து பணியாற்ற அழைக்கிறார்.

இறையரசைக் கட்டி எழுப்புவதே திருஅவைக்கு உரித்தான பணி. இதற்கு சமகாலத்தில் யதார்த்த சூழலில் மக்கள் இறை அனுபவம் பெற, கூட இருந்து பயணிக்க வேண்டிய பொறுப்பு திருஅவையின் மேய்ப்பர்களைச் சாரும். இவ்வாறான அர்த்தமுள்ள, ஆழமான பணிக்கு வடக்கு, கிழக்கு ஆயர்கள் இணைந்து ஓர் ஆயர் மன்றமாக செயற்படுவது பெரிதும் பயனளிக்கும்.

### திருஅவை அந்த மண்ணுடன் இரண்டறக் கலக்க வேண்டும்

வட கிழக்கின் மறைமாவட்டங்களான யாழ்ப்பாணம் – மட்டக்களப்பு – மன்னார் – திருகோணமலை ஆகியவை மொழி, கலை, கலாசாரம், பாரம்பரியம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் போன்றவற்றில் பெரிதும் ஒன்றித்துக் காணப்படும் அதே வேளையில் மொழி, கலை கலாச்சாரம் பாரம்பரியம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் போன்றவற்றில் இலங்கையின் ஏனைய மறைமாவட்டங்களில் இருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம், வரலாறு போன்றவற்றின் அடிப்படையில் வட,கிழக்கில் வாழும் மக்களது தேவைகளும் ஏக்கங்களும் கவலைகளும் எதிர்பார்ப்புக்களும் அனேகமாக வேறுபட்டே காணப்படுகின்றன.

பெரும்பான்மையினரது குரலில் சிறுபான்மையினரது குரல் மௌனிக்கப்படுவது இலங்கை வரலாற்றில் நாம் கண்ட உண்மை. சிறுபான்மையினரது ஒருமித்த குரல் தனியாக ஓங்கி ஒலிக்கும் போது அது நிச்சயமாகக் கேட்கப்படும். இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தேசிய ரீதியாக முன்னுரிமைப்படுத்தப்படும் தேவைகளில் கவனம் செலுத்தும் போது வட கிழக்கு மக்களது முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய பல தேவைகள் மறக்கப்படுகின்றன. இது வடகிழக்கு மக்களது நீண்டகால ஏக்கம்.

நடந்து முடிந்த முப்பது வருடகால யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் வட கிழக்கைச் சேர்ந்தவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த யுத்தம் ஏற்படுத்திய பல்வேறுபட்ட பாதிப்புக்களை இன்றும் மக்கள் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அநீதி இழைக்கப்பட்டு குரலற்றுப் போயிருக்கும் மக்கள் யார் தங்களுக்காக குரல் கொடுப்பார்கள் என்ற ஏக்கத்துடன் தவிக்கிறார்கள்.

மனித வாழ்வை செம்மைப்படுத்துவது வழிபாடு. திருவழிபாட்டில் மொழி, கலை கலாசாரம், பண்பாடு என்பன பாரிய பங்களிப்பைச் செய்கின்றன. திருஅவை ஒரு மண்ணில் ஆழமாக வேருன்ற அந்த மண்ணிற்கே உரித்தான மொழி, கலை,கலாசார, பண்பாடு என்பனவற்றுடன் இரண்டறக் கலக்க வேண்டும். எனவே ஒரே மொழி, கலை கலாசாரம், பண்பாட்டைக் கொண்ட மக்கள் ஒருமித்து செயல்படுவது இலகுவாகவும் அதேவேளையில் வழிபாடுகள் மேலும் அர்த்தமுள்ளவையாக வளர்ச்சி பெறவும் உதவும்.

### இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைக்கு முரணனாதல்ல வட கிழக்கு ஆயர் மன்றம்

இலங்கைத்திருஅவையின்வளர்ச்சிப்பாதையில் முக்கியமாக மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக வட கிழக்கு மறைமாவட்டங்களை இணைத்த ஒரு தனி அலகு அவசியமானதே. இந்த வட கிழக்கு ஆயர் மன்றம் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைக்கு முரணனாதல்ல. மாறாக இலங்கைக் கத்தோலிக்க திருஅவையின் ஒட்டுமொத்த தேசிய ரீதியிலான தேவைகளில் இலங்கை கத்தோலிக்க ஆயர்பேரவை கவனம் செலுத்த மொழி, கலை கலாசாரம், பழக்க வழக்கங்கள், பண்பாடு, பாரம்பரியம் என்பனவற்றில் வேறுபட்டிருக்கும் வட கிழக்கின் பிரதேச ரீதியிலான தேவைகளில் வட கிழக்கு ஆயர் மன்றம் கூடிய கவனம் செலுத்தும். இவ்வாறான செயற்பாட்டினால் இலங்கையின் அனைத்து மக்களது தேவைகளும் யாரும் புறம் தள்ளப்படாமல் கவனத்தில் கொள்ளப்படும். எனவே இது இலங்கைத் திருஅவையின் வளர்ச்சிப் பாதையில் ஒரு படிக்கல்லே அன்றி இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைக்கு முரணான தடைக்கல் அல்ல என்பதை யாவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

### வட கிழக்கு ஆயர் மன்றம் 1979 ஆண்டே கோரப்பட்டது

வட கிழக்கு மறைமாவட்டங்களின் ஆயர்களை இணைத்த ஓர் ஆயர் மன்றம் தேவை என்ற நிலைப்பாடு இன்று நேற்றல்ல, 1979 ஆண்டே அப்போதைய யாழ் மறைமாவட்ட ஆயராகிய மறைந்த மேதகு கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகையால் உணரப்பட்டு, அதற்கான அனுமதியும் கோரப்பட்டது. தொடர்ந்து வந்த வட கிழக்கு ஆயர்களின் முயற்சியாலும் 2005ஆம் ஆண்டு இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையிடம் முன்வைக்கப்பட்ட இக்கட்டமைப்பு அங்கீகரிக்கப்படாவிடினும் வட கிழக்கு மறைமாவட்டங்கள் இணைந்து செயற்படலாம் என ஆலோசனை வழங்கப்பட்டது. யுத்தம் மற்றும் ஏனைய காரணிகளால் காலம் தாழ்த்தப்பட்டாலும் தற்போது வட கிழக்கு ஆயர் மன்றம் காத்திரமாக செயல்படத் தொடங்கியுள்ளது.

### வட கிழக்கு ஆயர் மன்ற அறிக்கைகள் மக்களது நீண்டநாள் ஏக்க எதிர்பார்ப்பின் வெளிப்பாடே

வட கிழக்கு ஆயர் மன்றமாக நான்கு ஆயர்களும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கைகள் மக்களது நீண்டநாள் ஏக்கத்தின் எதிர்பார்ப்பின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளன. மிகவும் துணிவான, சக்தி வாய்ந்த அறிக்கைகளாக வெளிவந்துள்ளன. மக்களின் உணர்வுகளைக் கருத்தில் கொண்டு



## குரு முதல்வர் ஞானப்பிரகாசம் அலெக்ஸ் றெபேட் அடிகளின் கருத்துரை


காலத்தின் தேவையை அறிந்து வெளியிடப்பட்ட அந்த அறிக்கைகள் மக்களுக்கு நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் கொடுக்கின்றன.

முள்ளிவாய்க்காலில் பலியானோரை நினைவு கூரும் தினமாகிய மே 18 குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையை உற்று நோக்குகையில் இது கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமான அறிக்கையாக அல்ல, மாறாக வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் அனைவருக்குமான அறிக்கையாக –அழைப்பாக – அமைந்துள்ளது. அனைத்து வேறுபாடுகளையும், பாகுபாடுகளையும் தாண்டி அனைவரையும்ஒன்றிணைக்கும்ஓர்அறிக்கையாக இது அமைந்துள்ளது. வட கிழக்கு ஆயர் மன்றத்தின் அனைத்து மக்களையும் மையப்படுத்திய பணிகள் வலிமை பெற பயன் அளிக்க அனைவரது ஒத்துழைப்பும் இன்றியமையாதது.

மக்களின் மன(ண)ம் அறிந்து, அர்த்தமுள்ள, ஆழமான பணியாற்றும் வட கிழக்கு ஆயர் மன்றத்தின் அவசியத்தை உணர்ந்தும் இலங்கைத் திருஅவையின் வளர்ச்சிப் பாதையில் இது ஒரு படிக்கல்லே அன்றி இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைக்கு முரணான தடைக்கல் அல்ல என்பதை ஏற்றும் கூடிய விரைவில் வத்திக்கானில் உள்ள திருஅவையின் தலைமைப் பீடம் இதை அங்கீகரிக்கும் என வட கிழக்கின் தமிழ் கத்தோலிக்க மறைமாவட்டங்களான யாழ்ப்பாணம் – மட்டக்களப்பு – மன்னார் – திருகோணமலை ஆகிய மறைமாவட்டங்களைச் சேர்ந்த நாம் நம்புகின்றோம்.

காலைக்கதிர்
Kalaikkathir

# கொரோனாவுக்கு எதிரான போராட்டம்



எந்திரி நவரட்னம் சுதாகரன்
பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர்,
முல்லைத்தீவு, பிராந்தியம்.

அங்கம் 2

## ஓர் அனுபவத் தொடர்

**கோவிட் - 19 தொற்றின் பொதுவான இயல்புகள்**

அறிகுறி மற்றும் அறிகுறியற்ற நபர்களுக்கு இடையிலான வைரஸ் சுமைகளில் தொண்டையுடன் ஒப்பிடும் போது நாசிக்குழியில் அதிக வைரஸ் இருப்பதனை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த வைரஸ் உயிர் வாழும் காலம் 2 முதல் 14 நாள்கள் வரை இருக்கும். வைரஸ் பாதிக்கப்பட்ட நீர்த்துவலைகள் 12 மீற்றர் வரை பரப்பளவில் பரவுகின்றன. வைரஸ் டெபாசிட் ஆனவுடன் அவை சாதகமான சாதாரண வெப்பநிலை/வளிடண்டல நிலைமைகளில் பல நாள்கள் தொற்றுநோயைப் பரப்பும் தன்மை




கொண்டவை என அறிய முடிந்தது. இதனாலேயே சுடுநீர் அருந்துவதை நல்ல செயலாக தெளிவுபடுத்தினர்.

பொதுவாக தலைவலி, காய்ச்சல், இருமல், உமிழப்பட்ட எச்சில், தொண்டைப் புண், மூச்சுத்திணறல், சோர்வு, உடல் நலக்குறைவு அல்லது மார்பு இறுக்கம் மற்றும் டிஸ்போனியா தசை வலி, சோர்வு, கோரிஸா போன்ற மேல் சுவாசக்குழாய் அறிகுறிகள், சுவாசக்குழலில் இருந்து இரத்த வெளியேற்றம் மற்றும் வயிற்றுப் போக்கு ஆகியவை மிகவும் பொதுவான அறிகுறிகளாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இலேசான நோய் போக்கை அனுபவிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

**இலங்கையில் கொவிட் -19 நோய்த் தொற்று**

2021 ஜனவரி 27 ஆம் திகதி சீன நாட்டு பிரஜையொருவர் கொவிட் தொற்றுக்கு இலக்காகியிருந்தமையே முதல் முறையாக கொவிட் தொற்றாளர் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டமையாகும். அவர் இலங்கையின் அங்கொடாவில் உள்ள ஐ.டி.எச். தொற்று நோய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில், 2021 பெப்ரவரி 19 ஆம் திகதி பூரண குணமடைந்து சீனா நோக்கிப் பயணித்திருந்தார்.

இலங்கையிலுள்ள கொவிட் – 19 தொற்றுநோய் கடுமையான சுவாச நோய்க்குறி கொரோனா வைரஸ்2 (SARS Cov2) வைரஸால் ஏற்படும் உலகளாவிய தொற்றுநோயின் ஒரு பகுதியாகவே அறிவிக்கப்பட்டிருந்தது. யாரும் எதிர்பார்க்காத வகையில் இலங்கையிலும் இதன் பரவல் தலைதூக்கியது.



> “இலங்கையில் வைரஸின் முதல் அறிக்கையினை தொடர்ந்து சுகாதாரத் துறையினரால் விழிப்புணர்வு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டு சுகாதார முறைகளினையும் அறிவுறுத்தல்களினையும் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டதுடன் மக்களின் பாதுகாப்பிற்காக கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டிருந்தன.”

முதல்தொற்றினை அறிந்ததும் அச்சம் குடிகொண்டது. அதுவரையில் ஏனைய நாடுகளில் செய்திகள் வாயிலாக ஒரு செய்தியாகவே பார்த்துக்கொண்டிருந்தோம். இலங்கையில் வைரஸின் முதல் அறிக்கையினை தொடர்ந்து சுகாதாரத் துறையினரால் விழிப்புணர்வு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டு சுகாதார முறைகளினையும் அறிவுறுத்தல்களினையும் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டதுடன் மக்களின் பாதுகாப்பிற்காக கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டிருந்தன.

**கொரோனா தனிமைப்படுத்தல் சிசிச்சை நிலையம்**

இலங்கையின் தென்பகுதியில் கொரோனாத் தொற்று அதிகரிக்கத் தொடங்கிய நிலையில், வடக்கில் கோப்பாய் மற்றும் அக்கராயன் பகுதியில் தனிமைப் படுத்தல் நிலையங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன. எனினும் இந்நிலையம் நிறுவப்படுவது தொடர்பாக அந்தந்தப் பிரதேச மக்கள் மற்றும் வடக்கு மாகாணத்தின் பொது அமைப்புக்கள் சில தமது எதிர்ப்புக்களை வெளியிட்டிருந்தனர். இம்மையத்தின் மூலம் வடக்கு பகுதியில் கொரோனாத் தொற்று பரவல் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாக மக்கள் அஞ்சினர். எனினும் மருத்துவ அதிகாரிகளினால் இதன் அவசியம் தொடர்பாக எடுத்தியம்பப்பட்டு, கோப்பாய் யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரியில் COVID 19 Treatment Centre நிறுவப்பட்டு செயற்பாட்டுக்கு வந்ததுடன் ஆரம்பத்தில் பிற மாகாணங்களிலிருந்து தொற்றாளர்கள் இங்கு கொண்டுவரப்பட்டு தங்க வைத்து பராமரிக்கப்பட்டனர். தற்போது அங்கு கூடுதலாக வடக்கு மாகாண மக்களே தங்கியிருந்து பயன்பெறுகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதை ஆரம்பித்தவர்களது தீர்க்க தரிசனமான எண்ணம் இன்று எவ்வளவு பயன்பாட்டில் உள்ளது என்பதை நேரில் அனுபவித்தவன் என்ற வகையிலும் குறிப்பாக எமது வீட்டிற்கு அருகில் Home Quarantitne போன்று இருக்கக் கூடிய நிலை இருப்பது என்பது பெரிய விடயமாகவேஎன்னால்ஆத்மார்த்தமாகஉணரப்பட்டிருக்கிறது. ஏனெனில் வடக்கில் இருந்து, குறித்த பெருந்தொற்றுக்கு உட்பட்ட ஒருவரை தென்பகுதிக்கு கொண்டு செல்லும் நிலை இருந்திருக்குமாயின் (மொழி மற்றும் போக்குவரத்து) பெரும் இன்னல்களை அனுபவித்திருக்க வேண்டியேற்பட்டிருக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கிடையாது.

**அரச திணைக்கள செயற்பாடுகள்**

இக்காலப்பகுதியில் எனது அலுவலகமும் சுகாதார அறிவுறுத்தல்களுக்கமைய என்னுடைய வழிகாட்டலின் கீழ் இயங்கிக்கொண்டிருந்தது. அலுவலகத்தில் முகக்கவசம் அணிதல், தொற்று நீக்கிகளின் உபயோகம், வெளிநபர் தொடர்பு என்பவற்றின் சீரான நடைமுறைகள் திணைக்கள தலைவர் என்ற வகையில் என்னால் உறுதிப்படுத்தப்பட்டது. 2020 மார்ச் 10 ஆம் திகதியன்று இலங்கை பிரஜை முதல் தொற்றாளராகப் பதிவாகினார். எனினும் எமது வடக்கு மாகாணத்தில் இந்நோய் பரவாது என எண்ணியே சுதந்திரமாக திரிந்தோம்.

இந்நிலையில் தொடர்ச்சியாக உலகளவில் இதன் தாக்கம் தீவிரமடைந்து கொண்டிருக்கும் நிலையில் இலங்கையிலும் தொற்றாளர்கள் ஆங்காங்கு இனங் காணப்பட்டுக்கொண்டிருந்தனர். புதிய தொற்றாளர்




களின் எழுச்சியினால் 2020 மார்ச் 16 இனை இலங்கை அரசாங்கம் பொதுவிடுமுறையாக அறிவித்தது.

தொடர்ந்து இவ்விடுமுறை 2020 மார்ச் 19 வரையில் நீடிக்கப்பட்டது. தொற்று நோயை எதிர்கொள்ளும் முகமாக மார்ச் 19 அன்று அரசாங்கம் ஏற்கனவே விதிக்கப்பட்ட பொது விடுமுறையினை மார்ச் 20 தொடக்கம் மார்ச் 27 வரையான காலப்பகுதிக்கு (08 நாள்கள்) நீடித்தது.

தொடரும்

காலைக்கதிர் Kalaikkathir

# கூட்டமைப்புடனான ஜனாதிபதியின் சந்திப்பு அழுத்தங்களால் ஒழுங்குபடுத்தப்படவில்லை

## வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன



கொழும்பு, ஜூன் 20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சந்திப்பு எந்தவொரு அழுத்தங்களாலும் ஒழுங்குபடுத்தப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதேபோன்று எந்தவொரு அழுத்தங்களாலும் ஒத்திவைக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுக்கு வருமாறு ஜனாதிபதி அழைக்கவில்லை.

இரு தரப்பின் வேண்டுகோளின் பிரகாரம் புதிய அரசமைப்பு தொடர்பில் ஏற்கனவே நடத்தப்படவிருந்த பேச்சு, கொவிட் தொற்று நிலைமையால் பிற்போடப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த வியாழக்கிழமை பேச்சு நடைபெறவிருந்தது. ஆனால், தவிர்க்க முடியாத காரணத்தால் பேச்சு மீண்டும் பிற்போடப்பட்டுள்ளது.

தெற்கில் எழுந்த எதிர்ப்பால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சை ஜனாதிபதி ரத்துச் செய்துள்ளார் என்று ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்தியை அடியோடு மறுக்கின்றோம்.

தமிழ், முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி தலைமையிலான அரசு பேச்சு நடத்தத் தயாராகவுள்ளது.

நாட்டில் கொவிட் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தவுடன் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான செயற்பாடுகளை அரசு முன்னெடுக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# குருந்தூர் மலையை விரைவில் மீட்போம்!

## துரைராசா ரவிகரன் சூளுரை

முல்லைத்தீவு – தண்ணிமுறிப்புப் பகுதியில் தற்போது பௌத்த மயமாக்கல் முற்றுகைக்குள் உள்ள தமிழர்களின் பூர்வீக குருந்தூர் மலையை விரைவில் மீட்போம் என வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

குருந்தூர் மலையை மீட்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனுடன் இணைந்து வழக்குத் தொடர்வதற்கான முயற்சிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன என ரவிகரன் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

வழக்குத் தொடர்வதற்கான ஆயத்தப் பணிகளில் பெரும்பாலான பணிகள் முடிவுக்கு வந்துள்ளன எனவும், குருந்தூர்மலையை மீட்க விரைவில் வழக்குத் தொடரப்படும்.

தண்ணிமுறிப்புப் பகுதியில் அமைந்துள்ள குருந்தூர்மலை தமிழர்களின் பூர்வீக வழிபாட்டுத்தலமாகும். இந்த வழிபாட்டு இடத்திலேயே தற்போது பெரும்பான்மை இனத்தவர்கள், அரச திணைக்களங்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரின் அனுசரணையுடன் பௌத்த மதத் திணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். வழக்கைத் தொடர்வதற்கு பாரிய அளவில் ஆவணங்களைத் திரட்டியுள்ளோம். வழக்குத் தொடர்வதற்கான பெரும்பகுதி வேலைத் திட்டங்கள் முடிவுற்றுள்ளன. எனவே, விரைவில் வழக்குத் தொடரப்படும்.

அவ்வாறு எம்மால் தொடரப்படும் வழக்கின் ஊடாக, தமிழர்களின் காணாமல் ஆக்கப்பட்ட வழிபாட்டு அடையாளங்களை மீள நிறுவுவதற்கும், எமது பூர்வீக குருந்தூர் மலையில் இடம்பெறும் பௌத்த மயமாக்கல் செயற்பாட்டைத் தடுப்பதற்குமான முழு முயற்சிகளும் தீவிரமாக முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# பிரான்ஸ் செல்ல முற்பட்ட யுவதி விமான நிலையத்தில் கைதானார்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பிரதேசத்தில் இருந்து போலியான தகவல்களைச் சமர்ப்பித்து கட்டார் ஊடாக பிரான்ஸ் செல்ல முற்பட்ட யுவதி ஒருவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை கட்டார் நோக்கி புறப்பட இருந்த விமானத்தில் பயணித்து கட்டாரில் இருந்து பிரான்ஸ் நோக்கி செல்லவுள்ள மாங்குளத்தைச் சேர்ந்த 25 அகவையுடைய யுவதி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டுக்குப் பயணம் மேற்கொள்ளும் போது போலியான பி.சி.ஆர். அறிக்கை உள்ளிட்ட அனைத்து ஆவணங்களும் போலியாகத் தயாரிக்கப்பட்டு சென்ற யுவதியே இவ்வாறு கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# எரிபொருள்களின் விலையை பஸில் வந்ததும் குறைப்பார்

## பெரமுனவின் நம்பிக்கை இது



பஸில் ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற கட்சியை உருவாக்கியவர் மட்டுமல்லர் எனவும் நாட்டில் நடந்த மிகப்பெரிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் பின்னணியில் இருந்து செயற்பட்ட பாத்திரம் எனவும் அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

நாட்டில் பஸில் ராஜபக்ஷ இருந்திருப்பார் என்றால், எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் இரண்டு முறை சிந்திக்க சந்தர்ப்பத்தை வழங்கி இருப்பார் என மக்கள் மத்தியில் நம்பிக்கை இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கண்டி உடநுவர பிரதேசத்தில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே ரஞ்சித் பண்டார இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பஸில் ராஜபக்ஷ நாட்டுக்கு திரும்பி வரும் வரை மக்கள் பல எதிர்பார்ப்புகளுடன் இருக்கின்றனர். எரிபொருள் விலையைக் குறைப்பது அந்த எதிர்பார்ப்புகளில் ஒன்று.

இந்த நேரத்தில் எரிபொருள் விலையை அதிகரித்தது பொருத்தமானது என நம்பவில்லை. எமது கட்சியின் நிலைப்பாட்டை பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

என்ற வகையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமை தொடர்பாக எமது அதிருப்தியை வெளியிடுகிறோம் எனவும் ரஞ்சித் பண்டார குறிப்பிட்டுள்ளார்.

# 24 மணித்தியாலத்தில் 367 தொற்றாளர்கள் கிழக்கு மாகாணத்தில் நேற்று அடையாளம்

கிழக்கு மாகாணத்தில் நேற்றுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்தில் 367 கொவிட் -19 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதில் ஆகக் கூடுதலாக 268 பேர் மட்டக்களப்பு மாவட்டத்திலும் ஆகக்குறைவாக அம்பாறை சுகாதாரப் பிரிவில் 14 பேரும் மற்றும் கல்முனையில் 45 பேரும் திருகோணமலையில் 40 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர் என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர். எம்.தௌபீக் தெரிவித்தார்.


கிழக்கு மாகாண கொவிட் – 19 நிலைவரம் தொடர்பில் அவரிடம் வினவிய போதே இதனைக் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் 5 மரணங்களும் திருகோணமலையில் இரண்டு மரணங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. மட்டக்களப்பில் இவ்வாறு வெகு வேகமாகப் பரவும் தொற்றுநோய் கல்முனையிலும் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மற்றைய திருகோணமலை, அம்பாறை சுகாதாரப் பிரிவுகளில் நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்தும் காணப்படுகின்றது.

இவ்வாறான அதிகரிப்புகளுக்குப் பொதுமக்களின் பொழுதுபோக்கு தளமும் அநாவசியமான ஒன்றுகூடல்களும் நோய் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாகப் பரிசோதனைகள் மேற்கொள்ளாமல் வைத்தியசாலைகளுக்குச் செல்லாமல் மறைந்து வீடுகளில் இருப்பதால் நோய் மற்றவர்களுக்கு அதிகமாக ஏற்பட வாய்ப்புகள் உள்ளன எனவும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

## நேற்றைய வினாக்களுக்கான விடைகள்

தரம் - 8 | கணிதம் | அலகு 11




| தளவுரு | சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை | சுழற்சிச் சமச்சீர் வரிசை |
|---|---|---|
| 1.சமபக்க முக்கோணி | 3 | 3 |
| 2.இரு சமபக்க முக்கோணி | 2 | 2 |
| 3.செவ்வகம் | 2 | 2 |
| 4.சதுரம் | 4 | 4 |
| 5.சாய்சதுரம் | 2 | 2 |
| 6.இணைகரம் | 0 | 2 |
| 7.ஒழுங்கான ஐங்கோணி | 5 | 5 |
| 8.ஒழுங்கான அறுகோணி | 6 | 6 |
| 9.ஒழுங்கான எண்கோணி | 8 | 8 |
| 10.வட்டம் | பல | பல |

ஆக்கம் - திரு. தாமினா சுபாகரன்
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்
(கட்டுருபயில்வு) மாணவ ஆசிரியர்
யா/ செங்குந்த இந்துக் கல்லூரி


வழிகாட்டலும் ஆலோசனையும் -
திரு. ஞானமணி இரத்தினசிங்கம்
ஓய்வுநிலை விரிவுரையாள
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 8** | **முக்கோணிகளும் நாற்பக்கல்களும்** | **கணிதம் அலகு 12**


**முக்கோணிகளின் வகைகள்**

பக்கங்களின் அடிப்படையில்




.............................. .............................. ....................................


கோணங்களின் அடிப்படையில்




.................................... .................................... ....................................


**முக்கோணி ஒன்றின் அகக்கோணங்களின் கூட்டுத்தொகை**

* ஒருமுக்கோணியின் உச்சிகளில் உட்புறமாக அமையும் கோணங்கள் அகக்கோணங்கள் எனப்படும்.




$a + b + c = 180^\circ$


* முக்கோணி ஒன்றின் அகக்கோணங்களின் கூட்டுத்தொகை $180^\circ$ ஆகும்.





உதாரணம் :

$x + 75^\circ + 40^\circ = 180^\circ$
$x + 115^\circ = 180^\circ$
$x = 180^\circ - 115^\circ$
$x = 65^\circ$

x இன் பெறுமானம் காண்க.





**நாற்பக்கலொன்றின் அகக்கோணங்களின் கூட்டுத்தொகை**




$p + q + r + s = 360^\circ$


நாற்பக்கலொன்றின் அகக்கோணங்களின் கூட்டுத்தொகை $360^\circ$ ஆகும்.

உதாரணம்





$x + 85^\circ + 100^\circ + 95^\circ = 360^\circ$
$x + 280^\circ = 360^\circ$
$x = 360^\circ - 280^\circ$
$x = 800$

x இன் பெறுமானம் காண்க.





**முக்கோணி ஒன்றின் புறக்கோணங்களின் கூட்டுத்தொகை**

* ஒரு முக்கோணியின் பக்கங்களை ஓரொழுங்கில் நீட்டும்போது அதன் உச்சிகளில் வெளிப்புறமாக அமையும் கோணங்கள் **புறக்கோணங்கள்** எனப்படும்.
* ஒரு முக்கோணியின் பக்கங்களை ஓரொழுங்கில் நீட்டும்போது உண்டாகும் புறக்கோணங்களின் கூட்டுத்தொகை $360^\circ$ ஆகும்.





$x + y + z = 360^\circ$

உதாரணம்





உதாரணம் :

$x + 105^\circ + 120^\circ = 360^\circ$
$x + 225^\circ = 360^\circ$
$x = 360^\circ - 225^\circ$
$x = 135^\circ$





**நாற்பக்கல் ஒன்றின் புறக்கோணங்களின் கூட்டுத்தொகை**





$a + b + c + d = 360^\circ$

* நாற்பக்கலொன்றின் புறக்கோணங்களின் கூட்டுத் தொகை $360^\circ$ ஆகும்




$x + 85^\circ + 70^\circ + 125^\circ = 360^\circ$
$x + 280^\circ = 360^\circ$
$X = 360^\circ - 280^\circ$
$X = 80^\circ$




................................ ................................ ................................ ................................
................................ ................................ ................................ ................................
................................ ................................ ................................ ................................

**ஆக்கம் - திரு. தாமினா சுபாகரன்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர் (கட்டுருபயில்வு) மாணவ ஆசிரியர்**
**யா/ செங்குந்த இந்துக் கல்லூரி**

**வழிகாட்டலும் ஆலோசனையும் -**
**திரு. ஞானமணி இரத்தினசிங்கம் ஓய்வுநிலை விரிவுரையாள**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**

**இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.**

காலைக்கதிர் Kalaikkathir

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஜூலையில் வழக்குத் தாக்கல்

## செய்யப்படும் என்கிறார் வீரசேகர



2019 ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர்கள் மீது 2021 ஜூலைக்குள் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நம்புகிறேன் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

தாக்குதல் தொடர்பான 8 ஆவணங்கள் கடந்த நவம்பர் மாதம் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அனுப்பப்பட்டன என்றும் முக்கிய சந்தேக நபர்கள் மீது ஜூலை மாதத்திற்குள் வழக்குகள் பதிவு செய்யப்படலாம் என அவர் குறிப்பிட்டார் எனவும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை, இந்தியாவிற்கு தப்பிச்சென்றுள்ளார் எனக் கூறப்படும் சாரா ஜஸ்மின் என்ற புலஸ்தினி ராஜேந்திரன் இறந்துவிட்டாரா அல்லது உயிருடன் இருக்கிறாரா என்பது தொடர்பாக இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் உயிருடன் உள்ளார் எனக் கூறப்பட்ட சாட்சியங்கள் ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்கின்றன எனவும் மூன்றாவது தடவையாக மரபணு பரிசோதனை மேற்கொள்ள சட்ட ஆலோசனை பெறப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு குண்டுத்தாக்குலை மேற்கொண்ட பயங்கரவாதிகளில் ஒருவர் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுடன் தொடர்பில் இருந்தனர் என வெளியான தகவல் தொடர்பாக எந்த சாட்சியங்களும் கிடைக்கவில்லை என்றும் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

# ஆட்சி செய்ய உங்களால் முடியாவிட்டால் ஆட்சியதிகாரத்தில் இருந்து ஒதுங்குங்கள்

## பாரூக் வலியுறுத்து

அரசாங்கத்தால் இந்த நாட்டை ஆட்சி செய்ய முடியாவிட்டால், எதிர்க்கட்சியிடம் ஒப்படைத்து விட்டு, ஆட்சியதிகாரத்தில் இருந்து ஒதுங்குமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சட்டத்தரணி ஹுனைஸ் பாரூக் வலியுறுத்தியுள்ளார்.

மன்னாரில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கடந்த தேர்தல் காலங்களில் மஹிந்த அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும், ஆட்சிப்பீடம் ஏறுவதற்கு மாத்திரம்தான் என்பது தற்போதைய செயற்பாடுகள் ஊடாகப் புரிந்துக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

மேலும் அவர்களை நம்பி வாக்களித்த மக்கள், நடு வீதியில் நிற்க வேண்டிய நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது.

இதேவேளை பெற்றோலியத்தின் விலையை குறைப்பதற்கு மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதன்போது எதிர்காலத்தில் பெற்றோலியத்துக்கு விலை ஏறும்போது, மக்களுக்கு சமமான சேவையை வழங்குவதற்கே இந்தப் பணத்தைச் சேமிக்கின்றோம் என்றார்கள்.

ஆனால் தற்போது, அந்த சேமித்த பணத்திற்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. இந்த விடயம் தொடர்பாக அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களோ அல்லது ஜனாதிபதியோ பதில் கூற முடியாமல் தடுமாறுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

மேலும் பெற்றோலிய விலையேற்றம் தொடர்பாக ஆளும் கட்சிக்குள் ஜனாதிபதி ஒரு கருத்தையும் பெற்றோலிய அமைச்சர் ஒரு கருத்தையும் அமைச்சரவைக்குள்ளே ஒரு கூட்டு முடிவைக்கூற முடியாத நிலையில் காணப்படுகின்றார்கள்.

குறித்த விடயத்துக்கு சிறு பிள்ளைகளுக்குக் கதை கூறுகின்றமைபோன்று பிரதமர் மற்றும் ஏனையவர்கள் அந்த விடயத்தை மழுங்கடிக்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.









**'தாயகம் அறக்கொடை' நிறுவனத்தால் கொரோனாத் தொற்று பொது முடக்கத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. இவற்றுள் யாழ் பிரதேச செயலகம் ஊடாக 80 குடும்பங்களுக்கும் பெருமாள் கோவில் சுற்று வட்டாரம் உட்பட்ட 120 குடும்பத்திற்கும் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொருள்கள் வழங்கப்பட்டன. இவற்றின் மொத்த பெறுமதி 4 லட்சம் ரூபா ஆகும். 'தாயகம்' அறக்கட்டளையின் ஸ்தாபகர் வீ.சிறிதரன் முன்னின்று இவற்றை விநியோகித்தார்**

# கணவன் - மனைவி இருவரும் ஒரேநேரத்தில் ஒன்றாகச் சாவு

தெற்கு களுத்துறை பழைய வீதியில் வசித்த வயோதிப தம்பதி ஒரே நேரத்தில் ஒன்றாக உயிரிழந்துள்ளனர்.

இயற்கையான முறையில் மூளையில் ஏற்பட்ட இரத்தப் போக்கு காரணமாக இந்த மரணங்கள் நிகழ்ந்துள்ளன என களுத்துறை மரண விசாரணை அதிகாரி தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர் ஓய்வுபெற்ற இலங்கை போக்குவரத்து சபையின் நிர்வாக அதிகாரியான ஜனசிங்க என்ற 73 வயதுடைய கணவரும் 74 வயதுடைய விப்புலாவத்தி ஜயசிங்க என்ற அவரது மனைவியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அவர்கள் தங்கள் மகளின் வீட்டில் வாழ்ந்து வந்த நிலையில் கடந்த 16 ஆம் திகதி அதிகாலை உயிரிழந்துள்ளனர். பிரேத பரிசோதனையின் பின்னர் இந்த 2 மர ணங்களும் இயற்கையான முறையில் நிகழ்ந்துள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்

**காணி விற்பனைக்கு**

**இராச பாதை வீதி கோப்பாயில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

**077 773 0567**

# மனிதரில் இருந்து மிருகத்துக்கு கொவிட் மிருகத்திலிருந்து இதுவரை பரவவில்லை

மிருகக்காட்சி சாலைகளில் மிருகங்களை பார்த்துக் கொள்ளும் நபர்கள் ஊடாகவே மிருகங்களுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளது.

எனினும் மிருகங்களிடம் இருந்து மனிதர்களுக்கு கொவிட் தொற்றியமை தொடர்பில் இதுவரையில் எந்தத் தகவல்களும் இல்லையென ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நீலீகா மலவிகே தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய தற்போது வெளிவந்துள்ள தரவுகளுக்கமைய நாய், குரங்கு போன்றவற்றுக்கே கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தெஹிவளை மிருகக் காட்சிசாலையில் சிங்கம் ஒன்றிற்கு கொவிட் தொற்றியமை தொடர்பில் தெளிவுபடுத்தும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியக் கலாச்சாரம்....

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கேள்வி: தங்களது யோகா தொடர்பான அனைத்து விழிப்புணர்வு செயற்பாடுகளும் பாடசாலைகளுக்குள்ளேயே மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று ஒரு கருத்து நிலவுகின்றதே.....**

பதில்: யோகா தொடர்பான விழிப்புணர்வுகளை எமது இளம் சந்ததியினரிடையே ஏற்படுத்துவதற்கு பொருத்தமான இடம் பாடசாலைகளே. அதன் நோக்கம் எமது எதிர்கால சந்ததியினர் எதிர்கொள்ளவுள்ள பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளிலிருந்து தப்புவதற்கான ஆரோக்கியமான வாழ்வியல் நெறிமுறைகளை அவர்களிடமே விதைக்க வேண்டும் என்பதே.

ஆனாலும் எமது செயற்பாடுகள் பாடசாலைகளுக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ அலகில் பல பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. அரச உத்தியோகத்தர்களுக்கான பல பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன.

இவற்றின் பயனாக இன்று வடக்கு மாகாணத்தில் பல்வேறு இடங்களில் யோகா பயிற்சிகள் பல்வேறு தளத்திலுள்ளோருக்கும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**கேள்வி: அனைவரும் வீடுகளிலேயே முடங்கியிருக்கும் இந்நிலையில் இந்த வருடத்திற்கான தங்களது பன்னாட்டு யோகா நாள் நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் பற்றி கூற முடியுமா?**

பதில்: ஏழாவது பன்னாட்டு யோகா நாள் நிகழ்வுகள் இம்முறை இணைய வழியில் நடைபெறவுள்ளன. அந்த வகையில் இந் நிகழ்வானது ஜூன் 21 அன்று காலை 9.00 மணிக்கு இணைய வழியில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு தமது வாழ்த்துச் செய்திகளை வழங்கவுள்ளனர்.

இதைத் தவிர வடக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவியுடன் நடாத்தப்பட்ட இணைய வழி மூலமான யோகா தொடர்பான போட்டிகளில் மாவட்ட ரீதியில் முதல் மூன்று இடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 15 மாணவர்களுக்கான பணப்பரிசில்கள் முறையே மாவட்ட ரீதியிலான ஐந்து முதற்பரிசுகளாக தலா 20 ஆயிரம் ரூபாவும், மாவட்ட ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து மாணவர்களுக்கு இரண்டாம் பரிசுகளாக தலா 15 ஆயிரம் ரூபாவும் மற்றும் மாவட்ட ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து மாணவர்களுக்கு மூன்றாம் பரிசுகளாக தலா 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

மேற்படி இணைய வழி நிகழ்வில் ஆர்வமுள்ளோர் அனைவரும் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அதற்கான குறியீட்டு மற்றும் கடவுச்சொற்கள் எமது தூதரக முகநூல் பக்கத்திலும் இணையத்தளத்திலும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த இடத்தில் ஊடகவியலாளர்களான உங்களிடம் ஒரு வேண்டுகோள். இந்திய அரசினால் மாணவர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு வகையான புலமைப் பரிசில்கள் தொடர்பான விவரங்கள் தொடர்பில் மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக யோகாசன வல்லுனர்களுக்கான பல்வேறு பயிற்சிப் பட்டறைகளுக்கான புலமைப் பரிசில்கள் கூட வழங்கப்படுகின்றன. அவற்றுக்கான தூதரக ஊடக அறிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுத்து பிரசுரிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன். நன்றி!

காலைக்கதிர் Kalaikkathir

# தெற்கு அரசியலில் பெரும் பரபரப்பு நாடாளுமன்றம் வருகின்றார் பஸில்

## நிதி அமைச்சுப் பதவியும் ஒப்படைப்பு



அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பின்னர், தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக பஸில் ராஜபக்ஷ சத்தியப்பிரமாணம் செய்வார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்று பிரபல சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றதும் பஸில் ராஜபக்ஷவுக்கு நிதி அமைச்சு பதவி வழங்கப்படவுள்ளது எனவும், அதற்கான ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன எனவும் மேற்படி வட்டாரங் கள் தெரிவித்துள்ளன.

பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினராக வருவதற்காகப் பதவி துறக்கவுள்ள தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருடன் இந்த விவகாரம் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்து ரையாடியுள்ளார் எனவும் குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா சென்றுள்ள பஸில் ராஜ பக்ஷ எதிர்வரும் 23ஆம் திகதி நாடு திரும்புகின்றார்.

## கம்மன்பிலவுக்கு சு.க. ஆதரவு பிரேரணையை எதிர்க்க முடிவு

வலுசக்தி அமைச்சர் உதய கம் மன்பிலவுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை யிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதன்படி ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் சில உறுப்பினர்க ளால் முன்னெடுக்கப்படும் நடவடிக் கைக்கு எதிர்ப்பை வெளியிடவும், கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக் கையில்லாப் பிரேரணையை எதிர்ப்பதற்கும் முடிவெடுக்கப்பட்டுள் ளது.

இது தொடர்பான அறிவிப்பு விரைவில் உத்தியோகபூர்வமாக சு.கவின் பொதுச்செயலாளரால் வெளியிடப்படவுள்ளது.

## தொற்று நோய்ப் பிரிவு பணிப்பாளர் சுதத் சமரவீரவுக்கு திடீர் இடமாற்றம்




சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத் திய நிபுணர் சுதத் சமரவீர வுக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி சுகாதார அமைச் சின் டெங்கு நோய்த் தடுப்புப் பிரிவின் பணிப்பாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், வைத்தியர் சமித கினிகே தொற்று நோய்ப் பிரிவின் பதில் பணிப்பாள ராக நியமிக்கப்பட்டுள்ளார்.


கொரோனா தொடர்பான தகவல்களை வெளியிடுவது தொடர்பில் சுதத் சமரவீர வுக்கு எதிராகப் பல தரப்பின ரும் குற்றச்சாட்டுகளை முன் வைத்தனர். சமூகத் தொற்றை மூடிமறைக்கின்றார் என அரச வைத்திய அதிகாரி சங் கம்கூட சாடியிருந்தது.

கொரோனா மரணங்கள் தொடர்பில் வெளியிடப்பட்டி ருந்த தரவுகள் சம்பந்தமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவும் நேற்று அதிருப் தியை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறானதொரு பின்பு லத்திலேயே அவருக்குத் திடீர் இடமாற்றம் வழங்கப் பட்டுள்ளது.

## மாகாணத்துக்குள் மட்டும் போக்குவரத்துச் சேவைகள்

### ரயில் சேவையையும் முன்னெடுக்கத் தீர்மானம்




எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட் கிழமை அதிகாலை 4 மணிக்கு பய ணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டதும், மாகாணத்துக்குள் மாத்திரம் போக்கு வரத்து சேவைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

21ஆம் திகதி முதல் எதிர்வரும் 23ஆம் திகதி இரவு 10 மணி வரை, அத்தியாவசிய சேவைகளில் ஈடுப டும் பயணிகளுக்காக மேல் மாகா ணத்துக்குள் மாத்திரம் 17 ரயில் சேவை களை முன்னெடுக்கத் திட்டமிடப்பட் டுள்ளதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

பிரதான மார்க்கத்தில் 6 ரயில் களும் கரையோர மார்க்கத்தில் 4 ரயில்களும் களனிவெளி மார்க் கத் தில் 4 ரயில்களும் புத்தளம் மார்க் கத்தில் 3 ரயில்களும் சேவையில் ஈடுபடவுள்ளன.

அரசின் தீர்மானத்தின் பிரகா ரமே எதிர்வரும் 23ஆம் திகதியின் பின்னர் சேவையில் ஈடுடுவது குறித்து தீர்மானிக்கப்படும் என ரயில்வே போக்குவரத்து அத்திய ட்சகர் காமினி செனவி ரத்ன மேலும் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் பஸ் சேவையை முன்னெடுப்பது குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லை என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

பஸ் சேவை குறித்த ஆலோச னைக்காக காத்திருப்பதாக சபையின் பிரதி பொதுமுகாமையாளர் ஏ.எச். பண்டுக குறிப்பிட்டுள்ளார்.

எனினும், பயணக் கட்டுப்பாடு நீக்கப் பட்டதும் மாகாணத்துக்குள் ம ாத்திரம் மட் டுப்படுத்தப்பட்ட அளவில் பஸ் சேவை களை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

## தெமட்டகொடையில் மேலும் 15 வைரஸ் தொற்றாளர்கள்!

வேகமாகப் பரவி வரும் இந்திய 'டெல்டா' கொரோனா வைரஸ் முதலில் அடையாளம் காணப்பட்ட தெமட்ட கொடையில் மேலும் 15 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் எந்த வகையான கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என் பதை உறுதிப்படுத்த, சம்பந்தப்பட்ட மாதிரிகள் ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்துக்கு அனுப் பப்பட்டுள்ளன என்று சுகாதாரத்துறை தெரி வித்துள்ளது.

தெமட்டகொடை ஆரம வீதி பகுதியில் ஏற் கனவே 5 பேர் இந்திய 'டெல்டா' கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப் பட்டுள்ளதையடுத்து அங்கு மொத்தம் 129 பேர் பி.சி.ஆர். பரிசோதனை ளுக்கு உட்படுத்தப் பட்டனர். அவர்களில் 15 பேருக்குக் கொரோனா வைரஸ் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

'டெல்டா' வகை வைரஸ் தொற்றின் அபா யத்தைக் கருத்தில்கொண்டு தெமட் டகொடை ஆரம வீதிப்பகுதியில் உள்ள மக்களுக்கு இன்று கொரோனாத் தடுப் பூசி ஏற்றும் நடவ டிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

ஆரம வீதிப் பகுதியில் உள்ள அனைத்து மக் களுக்கும் கொரோனாத் தடுப்பூசி ஏற்ற நாங் கள் திட்டமிட்டுள்ளோம். ஏனெனில் இந்தப் பகுதியில் இந்திய 'டெல்டா' வகை கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட் டுள்ளனர். நேற்றைய பி.சி.ஆர். பரிசோதனை களில் மேலும் 15 கொரோனாத் தொற்றாளர் கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொழும்பு பகுதியில் நேற்று எழுமாறாக நடத் திய பி.சி.ஆர். பரிசோ தனைகளில் இருந்து சுமார் 70 கொரோ னாத் தொற்றாளர்கள் பதி வாகியுள்ளனர் என்று கொழும்பு மாநகராட்சி மன்றத்தின் தொற்றுநோயியல் நிபுணர் வைத் தியர் தினுகா குருகே தெரிவித்துள்ளார்.

## ரணிலுடன் டீலா? மறுக்கிறார் நாமல்



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் உட்பட எதிர்க்கட்சிகளின் தலை வர்களுடன் அரசுக்கு எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் கிடையாது.

- இவ்வாறு சிறிலங்கா பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தரும் அமைச் சருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன் வைக்கப்படவுள்ள நம்பிக் கையில்லாப் பிரேரணை, எரிபொருள் விலை உட்பட சமகால விவகாரங்கள் தொடர்பில் ஊடகவியலா ளர்களால் எழுப் பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கை யிலேயே அமைச்சர் நாமல் மேற்கண்ட வாறு கூறினார்.

இவை குறித்து அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு,

எரிபொருள்களின் விலையை அதி கரிப்பது தொடர்பில் வாழ்க்கைச்செலவு தொடர்பான அமைச்சரவை உப குழு முடிவெடுத்தது. அது தொடர்பில் ஜனாதி பதி அறிக்கையொன்றை விடுத்திருந்தார்.

எதிர்காலத்தில் விலை உயர்வில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அது தொடர் பில் கலந்துரையாடி முடிவெடுக்கப்பட்டு உரியவகையில் தீர்மானம் அறிவிக்கப் படும்.

அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை யைக் கொண்டுவருவதற்கு முன்னர் தமது தலைவர் ரணிலா, சஜித்தா என்பது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியினர் முடி வுக்குவரவேண்டும். தமது பிரச்சினையை தீர்த்துக்கொண்டே பிறர் மீது கவனம் செலுத்த வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, ஐக் கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரே மதாஸ, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் சம்பந்தன் உள்ளிட்ட எதிர்க் கட்சிகளுடன் எமக்கு எவ்வித கொடுக்கல், வாங்கல்களும் கிடையாது - என்றார்.